Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 172

புதன்கிழமை 17 மே 2023

வைகாசி 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

கோத்தாபய கொலை முயற்சி வழக்கு

## அரசியல்கைதியான ஆரூரன் மேல்நீதிமன்றால் விடுதலை!

கொழும்பு, மே 17
முன்னாள் பாதுகாப்புச் செயலராக கோத்தாபய பதவி வகித்த காலத்தில், அவரைக் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் »15

பண்ணை சுற்றுவட்டப் பகுதியில்

# நாகபூஷணி அம்மனை அகற்றும் பொலிஸாரின் முயற்சி தோல்வி!

## வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், மே 17
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில், பண்ணை சுற்று வட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நாகபூஷணி அம்மன் சிலை தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு, யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் நேற்றுத் தள்ளுபடி செய்யப் பட்டது. »15

உருத்திரபுரீஸ்வரர் மீதான

## ஆக்கிரமிப்பை எதிர்க்க அனைவரும் ஒன்றிணைக!

ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு

கிளிநொச்சி, மே 17
கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் மீது, தொல்பொருளியல் திணைக்களத்தால் »15

மாணவிகளைக் கடத்த முற்பட்டாரென்ற சந்தேகத்தில்

## உளநலம் பாதிக்கப்பட்டவர் மீது காட்டுமிராண்டித்தனத் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 17
யாழ்ப்பாணம் - ஒஸ்மானியாக் கல்லூரிப் பகுதியில், மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் மீது பலர் இணைந்து கொடூரத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றது.
பாடசாலை மாணவி ஒரு »15

## எரிந்த நிலையில் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், மே 17
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் வடக்குப் பகுதியில் முதியவர் ஒருவர் எரிவடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »15







Digitized by Noolaham Foundation

# இறப்பில்லாது வாழும் உறவுகளை அஞ்சலிக்க மே 18 இல் திரள்வோம்!

## மாவை சோ.சேனாதிராசா அழைப்பு



**யாழ்ப்பாணம், மே 17**

**பௌத்த சிங்கள மயமாக்கப்பட்ட தேசத்தில் போராலும் படையெடுப்புகளாலும் இனக்கலவரங்களாலும் குறிப்பாக இறுதிப் போரில் கொன்றுகுவிக்கப்பட்ட எமது தமிழ் உறவுகளை நினைவேந்த அனைவரும் வேற்றுமைகளை துறந்து ஒன்றிணைவோம். தமிழர் தேச விடுதலையை அடைவோம் எனும் திடசங்கற்பத்தை நிலை நாட்டுவோம்.**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

1948 இல் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் தமிழர்தேசத்துக்கு தமிழர் தேச மக்களுக்குக் கிடைக்கவில்லை.

கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்தேச மக்கள் விடுதலைக்காக ஜனநாயக வழியிலும், ஆயுத வழியிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த 70 ஆண்டுகளிலும் பௌத்த சிங்கள ஆட்சியின் மேலாதிக்கம் தமிழர் தேசத்தையும், தமிழ் மக்களையும் பௌத்த சிங்கள மயமாக்கி இன அழிவுக்கு உள்ளாக்கி வருகின்றது. இதனை சர்வதேசம் நன்கறியும்.

எஞ்சிய தமிழ் மக்கள் தங்கள் உயிர்களையும் எஞ்சிய தமிழர் தேசத்தையும் பாதுகாக்கவும் இழந்த சுதந்திரத்தை மீட்கவும் போராடுகிறார்கள்.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர் நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செய்வது நினைவு கூர்வது அவர்தம் பண்பாடாகும்.

உயிர்களைப் பலிகொடுத்த - களப் பலியாகிய மக்கள் ஆத்மாக்கள் நினைவு கூரப்படுவதும் அந்த மக்களிடத்திலே வாழ்நாளில் இறப்பில்லாது வாழ்ந்து வருவதும் இதயங்களில் நிலைகொண்டுள்ள நம்பிக்கையாகும்.

அதற்கமைய இந்தவேளையில் மே 18 முள்ளிவாய்க்காலிலும் தாம் வாழும் இடங்களிலும் அணி திரண்டு நினைவேந்தி தமிழர் தேச விடுதலையை அடைவோம் எனும் திடசங்கற்பத்தை நிலை நாட்டிக் கொள்வோம் - என்றார். (ச-இ)



## 5 ஆவது நாள் பயணத்தில் நினைவு ஊர்திப் பவனி!

யாழ்ப்பாணம், மே 17

தமிழ் இனப்படுகொலையின் நினைவாக முன்னெடுக்கப்படும் ஊர்திப் பவனி ஐந்தாவது நாள் பயணம், யாழ்ப்பாணம் கொக்குவிலில் இருந்து நேற்று ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் படுகொலை ஒளிப்படங்களைத் தாங்கிய இந்த ஊர்தியின் பவனி கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமானது. இந்த ஊர்தி வவுனியா, மன்னார், வெள்ளாங்குளம், மல்லாவி, மாங்குளம், கிளிநொச்சி, பூநகரி, சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. (எ-20)

## கொல்லப்பட்ட மக்களுக்கு பிதிர்க்கடன் செலுத்த ஏற்பாடு

முல்லைத்தீவு, மே 17

இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு பிதிர்க்கடன் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்குழு தெரிவித்துள்ளது. முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம் ஊடாகப் பிதிர்க்கடன் செய்யமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்நீர்த்தவர்களின் உறவுகள் பிதிர்க்கடன் செலுத்த நாளை 18 ஆம் திகதி காலை 7 மணிக்கு முள்ளிவாய்க்கால் கப்பல்வீதிக் கடற்கரையில் மண்டபங்கள் அமைக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் மறைகள் ஓதப்பட்டு, 15 அர்ச்சகர்கள் பிதிர்க்கடன் செய்ய ஆயத்தமாக இருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-19)



தமிழினப் படுகொலை நினைவு நாள் மே 18 இன் ஆரம்ப நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலை வரோதயநகர், சல்லி, தம்பலகாமம், சின்னக்குளம், அம்மன்நகர் ஆகிய கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. நினைவேந்தல்களில் கிராமமக்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-இ)

## யாழ்., பிரிட்டனில் மே 18 நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியால் இலங்கையிலும், இங்கிலாந்திலும் நடத்தப்படவுள்ளது.

"அழிக்கப்பட்ட மக்களை நினைவு கூர்வோம், அழிவுகளில் இருந்து அரசியல் பாடம் கற்போம்" என்ற கோசத்தை முன்வைத்து, "மீண்டெழுந்து புதிய பாதையில் முன்செல்வோம்" என்ற தொனிப்பொருளில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கையில் யாழ்ப்பாணம் புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நாளை 18 ஆம் திகதி மாலை 6 மணியளவில் மக்கள் பங்கேற்புடன் சுடரேற்றல் மற்றும் நினைவு உரைகளுடன் இடம்பெறவுள்ளன.

இங்கிலாந்தில் புதிய மால்டன் நகரில் மனோர் பூங்கா மண்டபத்தில் 18 ஆம் திகதி இங்கிலாந்து நேரம் மாலை 5 மணியளவில் நினைவேந்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இலங்கை போர்க்குற்றவாளிகளுக்கு பிரிட்டனும் தடை விதிக்கவேண்டும்

## எலியட் கோல்பேர்ன் வலியுறுத்து

லண்டன், மே 17

இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்கவேண்டும் என தமிழர்களுக்கான பிரிட்டனின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் எலியட் கோல்பேர்ன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏனைய சர்வதேச நாடுகளை பின்பற்றி பிரிட்டன் இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக மக்னிட்ஸ்கி பாணியிலான தடைகளை விதிக்க வேண்டும். இதற்கு மன்னிப்பு இல்லை. தமிழர்கள் செழிக்கக்கூடிய எதிர்காலத்துக்காக நாம் உழைக்கவேண்டும் என்றார்.

அதேவேளை, நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய எரிபொருள் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான நிழல் அமைச்சர் பரிகார்டினர் தெரிவித்ததாவது:-

இலங்கையின் நிலைமை இன்னமும் மாற்றமடையவில்லை. இன்னும் மனித உரிமை பேரவையின் எத்தனை அறிக்கைகள் தேவை? வடக்கில் இராணுவப் பிரசன்னத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?



தொழில் கட்சியால் இலங்கை மீது கொடுக்கப்படவேண்டிய அழுத்தங்களைக் கொடுக்கமுடியும் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய ஆசிய பசுபிக்கிற்கான நிழல் அமைச்சர் கதரின் வெஸ்ட் தெரிவித்ததாவது:

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஒரு தசாப்தத்துக்கு மேலாகின்ற போதும் எவரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. தொழில் கட்சி வலுவான ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானத்தைக் கொண்டு வரும். இலங்கை அரசாங்கத்தின் போர்க் குற்றங்கள் தொடர்பான சுயாதீன சர்வதேச விசாரணையைக் கொண்டு வரும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மருந்துகளால் தொடரும் சிக்கல்கள்!

கொழும்பு, மே 17

**கண்புரை சத்திரசிகிச்சையின்போது பயன்படுத்தப்பட்ட மருந்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து அந்த மருந்தை உற்பத்தி செய்யும் நிறுவனத்திடம் இருந்து இழப்பீடு கோரப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இந்த நிறுவனம் இலங்கைக்கு கடந்த ஏழு வருடங்களாக மருந்துகளை விற்பனை செய்கின்றது என்றும், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் கீழ் அந்த நிறுவனம் பதியப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இருதய நோயறிதல் பரிசோதனைக் கருவிகள் தரமற்றவை எனக் கண்டறியப்பட்டதை அடுத்து அவற்றை பாவனையிலிருந்து மீளப்பெற சுகாதார அமைச்சகம் முடிவு செய்துள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் ஒன்றியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற மயக்க மருந்துகளின் ஒரு லட்சம் குப்பிகள் பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன என்று மருத்துவர் சமல் சஞ்சீவ ஏற்கனவே தகவல் வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில் இருதய நோயறிதல் பரிசோதனைக் கருவிகள் பாவனையில் இருந்து மீளப் பெறப்படவுள்ளன என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் ஒன்றியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (எ-இ)

## வரணி மத்திய கல்லூரிக்கு வருகிறார் கல்வியமைச்சர்

சாவகச்சேரி, மே 17

வரணி ஒன்றியம் மற்றும் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் 20 மில்லியன் ரூபா செலவில் வரணி மத்திய கல்லூரியில் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த கலந்துகொண்டு கட்டடத் தொகுதியைத் திறந்துவைக்கவுள்ளார்.

கல்லூரி அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட தலைமைப்பீட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டீ.பி. எஸ். என். போதட்ட, கௌரவ விருந்தினர்களாக மத்திய கல்வியமைச்சின் செயலாளர் ஏ.உமாமகேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-9, 159)

## முற்கொடுப்பனவு வழங்க ஏற்பாடு!

*பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு*

கொழும்பு, மே 17

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான 5 ஆயிரம் ரூபா முற்பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

5 ஆயிரம் ரூபா முற்பணத்தை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக சில ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளிலிருந்து விலகினர் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள பரீட்சை நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதையடுத்து பணிகளுக்கான முற்பணத்தை செலுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ச-இ)

## கதிர்காமத்தில் நிலஅதிர்வு

கொழும்பு, மே 17

கதிர்காமத்தை அண்மித்த பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது என்று புவி சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கதிர்காமம் - லுனுகம் வெஹேர பகுதியில் சிறு அளவிலான நில அதிர்வு நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை பதிவாகியுள்ளது.

இந்த நிலஅதிர்வு 2.5 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

நிலஅதிர்வால் எந்தவொரு பாதிப்பு ஏற்படவில்லை என பணியகம் கூறியுள்ளது. (ச-இ)

### பரீட்சைக் காலத்தில்

## இயற்கை இடர்களை தவிர்ப்பதற்குத் திட்டம்

கொழும்பு, மே 17

பரீட்சைக் காலத்தின்போது சீரற்ற வானிலை காரணமாக ஏற்படக் கூடிய இடர்களை, இடையூறுகளைக் குறைப்பதற்கு இடைக்கால இடர் முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் மாதம் 8ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. 3 ஆயிரத்து 568 பரீட்சை நிலையங்கள் இதற்குத் தயாராகவுள்ளன.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழைக் காலத்தில் ஏற்படக்கூடிய தீவிர காலநிலைத் தாக்கத்தால் பரீட்சை மாணவர்களுக்கு இடையூறுகள் ஏற்படக்கூடும். அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு டெங்குத் தொற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக் காலத்தில் பரீட்சை நிலையங்களில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)




**எங்கட நாட்டில மரநடுகை விழாக்களுக்கு பஞ்சமே இருக்கிறேலை. ஏதாவது ஒரு நினைவுக்கு மரம் நடுகிறதுதான் எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு நல்ல நிகழ்வு. ஆனால் என்னதான் மரத்தை நட்டுக் கொண்டே இருந்தாலும், இன்னொரு பக்கத்தால எங்கட இடம் பாலைவனம் மாதிரி மாறிக் கொண்டேதான் இருக்குது. இதுக்கு எக்கச்சக்கம் காரணம் இருக்கு. அதெல்லாம் இப்ப சொல்ல நேரம் பத்தாது.**

**எல்லாரும் மரநடுகை விழா நடக்கிற அண்டைக்கு மட்டும் பெருமெடுப்பில வந்து, படத்துக்கு போஸ் குடுத்து, மரத்தை நட்டு, ஒரு வாளி தண்ணியை ஊத்திட்டு போடுவம். அதுக்குப் பிறகு அடுத்த வருசம் தான் அந்த மரத்தின்ர ஞாபகம் அவைக்கு வரும். ஒருவருசம் தண்ணி வெண்ணி இல்லாத மரம் எப்பிடி தழைச்சிருக்கும்? அதால, அடுத்த வருசமும் போனமுறை மரம் நட்ட இடத்திலேயே திரும்பவும் மரத்தை நட்டு, படமெடுத்திட்டு பறந்திடுவினம். இப்பிடித்தான் ஒவ்வொரு வருசமும் மரநடுகை விழாக்கள் ஒரே இடத்திலேயே நடந்து கொண்டிருக்கு.**

**ஆனால் எல்லாரும் இப்பிடி சும்மா பேருக்காக மட்டும் மரம் நடுகிறேலை. சமூகத்திலையும், மரங்களிலையும் அக்கறை உள்ளவையும் சிலர் இருக்கத்தான் செய்யினம். அவை மரம் நட்டால் அப்பிடியே இருக்கிறேலை. அந்த மரத்தை ஆடுமாடு கடிக்காதபடி கூடு அடிச்சு, எங்கையோ இருந்தெல்லாம் தண்ணி கொண்டந்து ஒவ்வொரு நாளும் ஊத்தி, அது செழிச்சு வளர்ந்து வரும் வரைக்கும் கண்ணும் கருத்துமாப் பாப்பினம்.**

**இப்பிடித்தான் புங்குடுதீவில மரங்களை நட்டு, அந்தப் பிரதேசத்தைச் செழிப்பா மாத்துறதுக்கு அங்கையுள்ள சில அமைப்புகளும், பெடியாங்களும் பாடுபடுகினம். இத்தனைக்கும் அங்க நல்ல தண்ணியும் பெரிசாக் கிடைக்காது. அதையும் தூர இடத்தில இருந்துதான் பவுசரில கொண்டந்து மரங்களுக்கு விடோணும். அப்பிடி கஷ்டப்பட்டு சூழலில ஆர்வமுள்ள பெடியாங்கள் வளர்த்த புங்கை மரக்கன்றுகளை , தங்கட வீட்டுக்கு இடைஞ்சலா இருக்கெண்டு சிலர் அப்பிடியே அடியோட வெட்டி விழுத்தியிருக்குதுகள். மரத்தை வெட்டுறதும் மனிசரை வெட்டுறதும் ஒரே அளவான பாவம் தான். அதுவும் மரங்கள் வளர கஷ்டப்படுற ஒரு பிரதேசத்தில செழிச்சு வளர்ந்த மரங்களை வெட்ட எப்பிடித்தான் மனம் வருகுதோ? ஒரு மரத்தை வெட்ட முதல் அதை வளர்க்க, சிலர் பட்ட கஷ்டங்களை நினைச்சுப் பாக்கோணும். சரி, உங்களுக்கு அந்த மரங்கள் இடைஞ்சல் எண்டால் உரியவையிட்ட சொன்னால் அதை அங்கால தள்ளி நட ஏதும் வழி செய்திருப்பினம். அதைவிட்டிட்டு இப்பிடி மரங்களை கொலை செய்யிறது கடும் பாவம் கண்டியளோ.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பேர்ள்' கப்பல் விவகாரத்தில் மறைக்கப்படும் உண்மைகள்

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 17**
**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் 250 மில்லியன் டொலர் லஞ்சம் பெற்றனர் என்று குறிப்பிடப்படும் விடயத்தில் அரசாங்கம் இது வரை உண்மையை பகிரங்கப்படுத்தவில்லை.**



இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். நேற்றுமுன்தினம் சுதந்திர மக்கள் சபை அலுவலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:
வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் ஊழல் மோசடிக்கு முடிவு எட்டப்படவில்லை. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் தனிநபர் ஒருவருக்கு 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது என நீதியமைச்சர் குறிப்பிட்டார்
பிரிட்டன் வங்கியில் 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வைப்பிடப்பட்டுள்ளது என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது பஹாமாஸ் தீவு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்த முரண்பாட்டின் உண்மை எதுவென இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. உண்மையை மூடிமறைப்பது தெளிவாகப் புலப்படுகிறது. ஊழல் மோசடிக்கு முடிவுகட்டி நாட்டை மீட்டெடுக்க வேண்டும் -என்றார். . (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்:** உடல்நலனில்கவனம்தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். லாபம் குறைவாகவே கிடைக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** பொறுமையுடன் சிந்தித்துச் செயற்பட வேண் டிய நாள். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஐ.ம.சக்தி ஆதரவு வழங்கும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 17
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான யோசனைக்கு நாம் ஆதரவையும் அனுமதியையும் வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதித் தேர்தலை முன்னரே நடத்துவதற்குத் தேவையான சட்டவரைவுகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்கும்.
இதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து ஜனாதிபதித் தேர்தல் சவாலை ஏற்பதற்கு நாம் தயார்.
தேசிய கொள்கையை கேந்திரமாகக் கொண்ட பயணத்துக்கு நாம் தயாராகவுள்ளோம். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டாயினும், ஆறில் ஐந்தாயினும் தேவையான பெரும்பான்மையை வழங்குவோம். அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைத் தொடர்ந்தும் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பதற்கு இடமளிக்காது விரைவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலை வழங்குமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார். (ச-இ)

# மருந்துகளின் விலை 2 வாரங்களில் குறையும்

*அமைச்சர் ஹெகலிய கூறுகிறார்*

கொழும்பு, மே 17
எதிர்வரும் இரு வாரங்களுக்குள் மருந்துகளின் விலை குறைக்கப்படும் என சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தற்போது மருந்துகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. தற்போதுள்ள விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும். விரைவில் மருந்துகளின் விலைகள் குறைக்கப்படும்- என்றார். (எ-இ)

# கோத்தாவை விரட்டியது மக்களின் போராட்டமே!

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மே 17
கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டியது சதி இல்லை. அது மக்கள் போராட்டம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
மக்கள் போராட்டம் என்பது மொட்டுக் கட்சியினர் கூறுவது போல் சதி இல்லை. அது நியாயமான மக்கள் போராட்டம். மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை காரணமாக அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடி கோத்தாபயவை விரட்டியடித்தனர்.
அன்று வீதிக்கு இறங்கிய அத்தனை மக்களும் எதிர்பார்த்தது சிறந்த மாற்றம் ஒன்றையே. அந்த மாற்றத்தைக் கொடுக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக எம்மால் முன்னோக்கிச் செல்லமுடியாது. இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் கவனமாகப் பொறுப்பாக நடந்துகொள்ளவேண்டும்.
இந்த நேரத்தில் எமது ஆட்சி இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்கி இருக்கமாட்டோம். கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். ஆனால், செய்கின்ற முறை பற்றி அரசு கூறுவதில்லை.
சிறிய தொழில் முயற்சியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்த நிவாரணத்தையும் இந்த அரசு வழங்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியுடன் இதற்கான வேலைத்திட்டத்தைத் தொடங்கமுடியும். இதன்மூலம் உள்ளூர் உற்பத்தியையும் ஏற்றுமதி வர்த்தகத்தையும் அதிகரிக்கமுடியும்.
பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அதிகமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றுக்கு முன்னுரிமை வழங்கும் வேலைத்திட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவு வழங்கத் தயார் - என்றார். (எ-22)

# எதிரணி தாவும் எம்.பி.க்கள்

கொழும்பு, மே 17
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சுப் பதவி வழங்காமல் இழுத்தடித்து வருவதால் அந்தப் பதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்கள் எதிரணி வரிசையில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று அறிய முடிகின்றது.
எதிரணி வரிசையில் அமர்ந்தாலும் அவர்கள் மொட்டுக் கட்சி உறுப்பினர்களாகவே இருப்பார்கள் என்றும், ஆனால் அரச நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அமைச்சுப் பதவிகள் வழங்கவேண்டும் என்று கேட்டு பல மாதங்களாகியுள்ளன. ஆனால், ரணில் இதோ தருகின்றேன், தருகின்றேன் என்று இழுத்தடிப்பதால் இவர்கள் இப்போது ஆத்திரமடைந்துள்ளனர். (எ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாட்டின் தலைவரா? மதத்தின் தலைவரா?

மதங்கள் தொடர்பாக பிரதானமாக புத்த மதம் தொடர்பாக போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கூறியிருக்கும் கருத்து நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராகப் பல்வேறு அமைப்புக்கள் கிளர்ந்தெழுந்திருப்பதுடன், கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்தவிடயத்தில் உடனடியாகத் தலையிட்டிருக்கின்றார். இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கூறியிருக்கும் கருத்துக்கள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அவர் உத்தரவிட்டிருக்கின்றார்.

மதங்களை அவமதிக்கும் வகையில், நிந்திக்கும் வகையில் கருத்துக்களைப் பொதுவெளியில் பகிர்வதை – பரப்புவதை எந்தவிதத்திலும் நியாயப்படுத்தமுடியாது. அவ்வாறு நடந்து கொள்பவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. போதகர் ஜெரோம் பெர்னாண்டோ அவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தால் அது கண்டிக்கப்படவேண்டும். இனங்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப் பணித்திருப்பதும் நல்ல விடயமே. இனங்களிடையே முரண்பாடுகள் வரக்கூடாது என்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் "பொறுப்புணர்வை" பாராட்டும் அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக நாட்டு மக்கள் அனைவரதும் தலைவராகச் செயற்படுகின்றாரா? என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியாதிருக்கின்றது.

தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் இப்போது பௌத்த ஆக்கிரமிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. சட்டவிரோதமாக– திருட்டுத்தனமாக ஆங்காங்கே விகாரைகள் தோற்றம் பெறுகின்றன. பௌத்த மக்களே இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் அமைக்கப்பட்டு பௌத்தமயமாக்கும் சதித் திட்டங்கள் அரச திணைக்களங்களினதும், இராணுவத்தினரதும் துணையுடன் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக நடக்கும் இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பலமுறை எடுத்துக்கூறியும் இதுவரை எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இன்னமும் பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

புத்தரை அவமதிக்கும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன என்றவுடன் விழுந்தடித்து பணிப்புரைகளை விடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெடுக்குநாறி மலையில் தமிழ் மக்களின் தெய்வங்களின் விக்கிரகங்கள் அதிகார மறைகரங்களின் உதவியோடு இடித்தழிக்கப்பட்டபோதும், குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி விகாரை அமைக்கப்பட்டபோதும் மௌனமாகவே இருந்தார். தேரர்கள் அடாவடியாகத் தமிழ் மக்களின் வழிபாட்டிடங்களைக் கையகப்படுத்தும்போதும் ரணில் பாராமுகமாகவே இருக்கின்றார். நாட்டின் தலைவர் என்ற மிகப் பெரும் பொறுப்பில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க தன் இனத்துக்கு ஒரு நீதி என்றும், சிறுபான்மையினருக்கு ஒரு நீதி என்றும் பக்கச்சார்பாகவே நடந்துகொள்கின்றார்.

காலங்காலமாக நீடித்த இந்த மனோநிலையும், அதனால் சிறுபான்மை மக்கள் மத்தியில் ஏற்பட்ட விரக்தியுமே இலங்கையின் அழிவுக்கு மூல காரணம். இத்தனை பட்டறிவுக்குப் பின்னரும் தெற்கின் இந்த மனோநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் சமநீதி எப்போது கிடைக்கின்றதோ அப்போதே இந்த நாட்டுக்கு மீட்சி கிடைக்கும் என்பது நிதர்சனம். இந்த இடத்தில் நயினாதீவு ராஜமகா விகாரை பிக்கு, பௌத்தர்கள் இல்லாத இடத்தில் எதற்காக விகாரைகள் கட்டப்படுகின்றன. இவர்கள் மதங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள் எனக் கூறியிருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. ரணில் விக்கிரமசிங்கவும் அதை உணர்ந்து "நாட்டின் ஜனாதிபதியாக [illegible] கொள்ள வேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

" அன்பில்லாத இடத்தில்தான் கோபம், முட்டாள்தனம், விரோதம் எல்லாம் இருக்கும் "
– இங்கர்சால்



# 2023 இல் வீழ்ச்சி 2024 இல் வளர்ச்சி

## இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் எதிர்வுகூறல்

**கொழும்பு, மே 17**

**2024ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 1.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்யும். ஆனால் இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ண ஸ்ரீனிவாசன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்தகாலக் கொள்கைத் தவறுகளாலும் தொடர்ச்சியான பொருளாதார அதிர்ச்சிகளாலும் இலங்கை கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இலங்கையில் ஏழை மக்கள், பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் மீதான நெருக்கடியின் தாக்கம் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியை அணுகுவதில் உருவாகும் தாமதத்தால் ஏற்படும் பொருளாதாரச் செலவுகள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் கவலை கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய கடன் வசதியின் முதலாவது தவணைக் கடன், இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி உள்ளிட்ட புதிய நிதியுதவியை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

சர்வதேச நாணய நிதிய, விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதலாவது மதிப்பாய்வின் ஊடாக இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவடையும். இலங்கையின் தனியார் கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் சர்வதேச நாணய நிதியம் ஈடுபடவில்லை - என்றார். (எ-இ)

# டிஜிற்றல் மயமாகவுள்ள பொதுப்போக்குவரத்து!

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

பொதுப்பயணிகளுக்கு மேலதிக வசதியுடன் கூடிய போக்குவரத்து சேவையை வழங்கும் வகையில் போக்குவரத்துத் துறை டிஜிற்றல் மயமாக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பயணச்சீட்டு மற்றும் ரயில் பயணச்சீட்டு என்பன கியூ.ஆர். முறைமைக்கு மாற்றப்படவுள்ளன. அதன்மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும் - என்றார். (எ-ரி.இ)

நாளை 18.05.2023 வியாழக்கிழமை வைகாசி 04

சுபநேரம் : 07.23 - 08.53
ராகுகாலம் : 01.23 - 02.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் திணைக்கள அடாவடியை தடுத்து நிறுத்தி புனிதத்தைக் காக்கவும்

## ஜனாதிபதிக்கு கிளி. உருத்திரபுரீஸ்வரர் ஆலய அறங்காவலர்சபை மனு

வவுனியா, மே 17

**இன, மத வேறுபாடுகளற்று தொல்பொருள் சின்னங்களையும் அவற்றின் தொன்மையையும் பாதுகாக்க வேண்டிய தொல்பொருள் திணைக்களம் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தும் வகையில் செயற்படுகிறது. இது மதப்பதற்றத்தை ஏற்படுத்தும் இனத்துவ ஆதிக்கத்தின் வெளிப்பாடு. இந்தச் செயற்பாட்டை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த ஜனாதிபதி தலையீடு செய்யவேண்டும்.**

இவ்வாறு கிளிநொச்சி உருத்திர புரீஸ்வரர் ஆலயத்தின் அறங்கா வலர்சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியாவிலுள்ள ஜனாதிபதியின் உப அலுவலகத்துக்கு நேற்றுமுன் தினம் சென்று மனுவொன்றைக் கையளித்தனர். அந்த மனுவிலேயே அவர்கள் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஊடகங் களுக்குத் தெரிவித்ததாவது:

எமது ஆலய வளாகத்தில் தொல் பொருள் திணைக்களத்தின் ஏற்பாட் டில் நாளை 18 ஆம் திகதி நில அளவை இடம்பெறவுள்ளது என கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்பொருள் சின்னம் அமைந்துள்ள நிலப்பரப்பை எல் லைப்படுத்துவதற்கான வேலைத்திட் டம் முன்னெடுக்கப்படுகிறது.

இன, மத வேறுபாடுகளற்று தொல் பொருள் சின்னங்களையும் அவற் றின் தொன்மையையும் பாதுகாக்க வேண்டிய தொல்பொருள் திணைக் களம், பௌத்தமதத்தை முன்னி லைப்படுத்தும் வகையில் தமிழர்க ளின் பூர்வீக நிலங்களில் இனத்துவ ஆதிக்கத்தை வெளிப்படுத்துகிறது.

2400 ஆண்டுகளுக்கு முந்தைய பழைமையையும் இலங்கையில் சதுர ஆவுடையார் கொண்ட சிவ லிங்கத்தை உடைய ஒரேயொரு சிவாலயமாகவும் விளங்கும் பெரு மையைக் கொண்டது கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்.

பூசை மரபுகளும், வழிபாடுகளும் மிக இயல்பாக நடைபெற்று வரும் சூழலில் மதப்பதற்ற சூழலொன்று ஏற்படுத்தப்படுகிறது. இந்தச் செயற் பாடு வன்மையாகக் கண்டிக் கத்தக்கது.

தொல்பொருள் திணைக்களத்தின் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் நாளை திரள வுள்ளனர்.

ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப் படவுள்ள அளவீட்டுப் பணிகளையும் அதனோடு தொடர்புடைய தலையீட் டையும் நிறுத்தி ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாக்க ஜனாதிபதி ஆவன செய்யவேண்டும் என மனு வில் குறிப்பிட்டுள்ளோம் - என்ற னர். (ச-110)

## வரணியில் அதிகரிக்கும் மாடு கடத்தல் சம்பவங்கள்

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கொடிகாமம், மே 17

வரணியில் இரவு நேரத்தில் மாடுகள் கடத் தப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்தும் இதுவரை திருடர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் கள் விசனம் தெரிவித்தனர்.

இரவு 11 மணிக்குப் பின்னர் வாகனங்களில் வருவோர் தோட்டங்கள், வளவுகள், வீட்டின் அருகேயுள்ள பகுதிகளில் கட்டப்பட்டுள்ள மாடுகளைக் கடத்திச் செல்கின்றனர். நேற்று முன்தினம் வரணி, குடமியனில் வீட்டின் அருகே கொட்டகையில் கட்டப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பசுமாடு கடத்திச் செல்லப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரி வித்தனர்.

இது தொடர்பாகப் பொலிஸார் உரிய நடவ டிக்கை எடுத்து மாடுகள் கடத்தப்படுவதைத் தடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

## நெசவு ஆலைகளில் தொழில் வாய்ப்பு!

யாழ்ப்பாணம், மே 17

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அளவெட்டி மற்றும் மாவிட்டபுரத்தில் வடக்கு மாகாணசபையின் கீழ் இயங்கும் நெசவு ஆலைகளில் தொழில் வாய்ப்புள்ளது என்றும், அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண் டும் என்றும் தெல்லிப்பழைப் பிரதேசசெயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியாளர்களாக இணைந்து, தொழில் முயற்சியாளர்களாக மாறமுடியும். முதல் ஆறு மாத காலம் முழுமை யான பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சிக்காலத் தில் நாள் ஒன்றுக்கு 200 ரூபா ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் என்று பிரதேசசபை விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பயிற்சி நிறைவில் சிறந்த நாளாந்த வருமானம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். தொழில்வாய்ப்பைத் தேடுவோர் இந்தச் சந் தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 50 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இந்தப் பயற்சியில் இணைந்து கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. (எ-66)

## கிளிநொச்சி நகர்ப் பகுதியில் டெங்குஒழிப்பு செயற்பாடு



கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஏ-9 வீதியை மையமாகக் கொண்ட பல இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கரைச்சி பிரதேசசெயலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கரைச்சி சுகா தார மருத்துவ அதிகாரி பணிமனை, பாதுகாப்புத் துறை யினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், பாடசாலைச் சமூகத்தினர், பொலிஸ் திணைக்களம், கரைச்சிப் பிரதேச சபையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சமூக மட்ட அமைப்புகள், சமூகத் தொண்டர் அமைப்புகள் எனப் பல்வேறு தரப்பினரும் இணைந்து சிரமதானச் செயற்பாட்டின் மூலம் இந்தத் திட் டத்தை முன்னெடுத்தனர்.

டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களான குப்பை கள், வெற்றுப் போத்தல்கள் நீர் தேங்கக் கூடிய இடங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. பெருமளவான திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு கரைச்சிப் பிரதேச சபையின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன.

டெங்குத் தொற்றின் தாக்கம் தொடர்பாகக் கருத்துக்கள் அடங் கிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் துறைசார்ந்த திணைக் கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டன. (எ-113)

## முல்லைத்தீவைச் சேர்ந்தவர் கனடாவில் உயிரிழப்பு

கொழும்பு, மே 17

கனடாவில் வாகன விபத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

முல்லைத்தீவு அனிஞ்சியன்குளம் மல்லா வியை பிறப்பிடமாகக் கொண்ட 39 வயதான வரே உயிரிழந்துள்ளார்.

வீதியில் திடீரென குறுக்காக ஓடிய மான் ஒன் றின் மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### கூடைப்பந்தாட்டத்தில்

## திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய மட்டத்தில் சம்பியன்!

இலங்கை பாடசாலை கூடைப் பந்தாட்ட சங்கத்தால் தேசிய ரீதி யாக நடத்தப்பட்ட 16 வயதுக்குட் பட்டவர்களுக்கான கூடைப்பந் தாட்டப் போட்டியில் யாழ்.திருக்கு டும்ப கன்னியர்மடம் சம்பியனா கியுள்ளது.

கொழும்பில் கடந்த சனிக் கிழமை போட்டியின் இறுதிச் சுற்று இடம்பெற்றது.

அதில் சென். பிரிட்ஜெட்ஸ் கான் வென்ட் முதல்கால்பாதியில் 4:4 என்ற ரீதியிலும், இரண்டாவது கால் பாதியில் 8:8 என்ற ரீதியி லும், மூன்றாவது கால்பாதி யில்16:10 என்ற ரீதியிலும்,



நான்காவது கால் பாதியில் 26:14 என்ற ரீதியிலும் வென்று சம்பியனைத் தனதாக்கியது.

போட்டியின் சிறந்த வீராங்கனை யாக ஜெபோஷினி கைசிங் ரவீந் திரகுமாரும் சிறந்த தற்காப்பு வீராங்கனையாக விஜயரூபன் சகா னாவும் தெரிவாகினர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்
> தொக்க சீர்த்த இடத்து."
> -வள்ளுவர்



# உயிர் பிழைப்பை நோக்கிய பறவையாக...

எல்லாமே சட்டென்று முடிந்துவிட்டது. மண்பானையொன்று தளம்பிய நீரோடு தார் வீதியில் விழுந்துநொறுங்குவதைப் போல... விஜய தசமி அன்று கூர்வாள் போன வேகத்தில் இரண்டாய்ச் சரிந்துவிழும் வாழை போல... எல்லாமே சட்டென்று முடிந்துவிட்டது. ஒரு தறப்பாள், நாலு தடிகள், மறக்காமல் எடுத்து வைத்த மண்வெட்டி, உரப்பை, பழைய சேலைகள் இவைதான் அன்றைய எங்களது வாழ்க்கை. எங்கே 50 கிராம் சீனி வாங்கலாம் என அறியக் கிடைக்கிறதோ அதுவே அன்றைய மிக நல்ல செய்தியும், சிறப்புச் செய்தியும் ஆகிவிடும். ஒரு தூக்குத் தண்டனைக் கைதியின் கழுத்து தூக்குக்குள் நுழைந்திருக்கும் தருணத்தைப் போலவே அத்தனை பேரது இதயங்களும் படபடப்பாக இருந்தன.

### பூமி பொறுமையானது கொடுமையானதும் கூட

வரலாற்றில் முதன்முறையாகத் தாய் பிள்ளையிடம் தனக்குப் பசிக்கிறதெனச் சொன்ன பரிதாபம், ஆண் மகன் ஒப்பாரி வைத்தழுத அவலம். அந்தக் கடற்கரை மணல்வெளியில் நிகழ்ந்தேறியது. வெட்கமும் ஆற்றாமையும் குழைத்துப் பூசிய முகத்தைத் தாடியால் மறைத்துக் கொண்டு கஞ்சிக்காக வரிசையில் நின்ற சிதம்பரம் மாஸ்டரைப் பார்த்தபோது ஓவென்று கதறி அழுதுவிடவேண்டும் போலிருந்தும் அடக்கி வைத்த அழுகையை என்னால் அப்போது வெளிக்காட்டவே முடியவில்லை. கவனிக்காதது போல் அவரைக் கடந்து செல்லவே முடிந்தது. ஊருக்கே சோறுபோட முடிந்த அந்த இறுமாப்பில்லாத மனிதனை ஒரு வயிற்றுக் கஞ்சிக்காகக் காத்திருக்க வைத்த காலம் எத்தனை கொடுமையானது.

குழி விழுந்த சிரிப்பையும், சாப்பிட்டாச்சா? என்ற வார்த்தையையும் யாரைப் பார்த்தாலும் உவகையோடு தந்துவிட்டே அடுத்த வார்த்தை பேசும் அந்த வீரன் மண்ணப்பிய முகத்தோடு அரையுடலாய் கிடக்க வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்து வர மட்டும்தான் முடிந்தது. அவனுக்கான கண்ணீர் இன்னும் சிந்தப்படாமல் உயிர்க்கூட்டில் கிடந்து கொதித்துக் கொண்டுதானிருக்கிறது. இவற்றையெல்லாம் எங்கே இறக்கி வைப்பதெனத் தெரியாமல் காலம் இழுத்த திசைக்கெல்லாம் அலைகின்றன கால்கள். தெருவோரக் கதவையும் சாத்திவிட்டே வீட்டுக்குள் தனது உடை மாற்றும் நண்பனின் தங்கை அம்மணமாய்க் கருகிக்கிடக்க போர்த்திவிடக்கூட ஏதுமின்றி தலையை மட்டுமே திருப்ப முடிந்த அந்த கையாலாகாத்தனத்தின் நினைவுகளை மீட்கமீட்க மனம் வெதும்பிப் புரள்கின்றது. அவள் எறிந்துபோன பெண்மை இன்று வரையும் நண்பனைப் பைத்தியக்காரனாகவே வைத்திருக்கிறது.

### மறக்கமுடியாத சோகம்

கையிலிருக்கும் ரொட்டித்துண்டை எட்டு வருடம் கழித்துப்பிறந்த தனது குழந்தைக்கு ஊட்டிக்கொண்டிருக்கும்போது ஷெல்பட்டுச் செத்துப்போன அந்த இருவரையும் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருக்கும் கவி அண்ணாவின் கைகளைப்பிடித்து ஒற்றை வார்த்தை கூறமுடியாத அந்த நிமிடங்களை வெறும் சம்பவமாக எப்படி வரையறுக்க முடியும். ஒவ்வொருநாளும் காலையில் தன்னுடைய சைக்கிளில் அத்தனைபேருக்கும் சாப்பாடு எடுத்துவரும் எழிலரசி அக்கா, பால் போத்தலோடு கடக்கும் போதெல்லாம் என்னைக் கண்டு பாலைவிட வெள்ளையாய் சிரித்து விட்டுப் போவாள். அன்று அவளை வெறும் சிவப்பாக வடலியில் தலைமட்டுமே காண்பேனென்று கனவிலேனும் நினைக்கவில்லை. பால்ச் சிரிப்பு பழுதின்றிக் கிடந்தாலும் வடலித் தலைதான் மனசை நிறைத்துப் பாரமாக்குகின்றது. அந்தப் பால்ச்சிரிப்பை பாழாக்கியது எந்த நாட்டு எறிகணையின் எச்சம். தேடிக்கொண்டிருக்கிறது காலம்.

கத்தரி இப்ப காய்ச்சிருக்கும். மிளகாய் பூக்கத் தொடங்கியிருக்கும். கொஞ்சநாள் நிண்டிருக்க வெண்டிக்காயை வித்திருக்கலாம் என்று தனக்குள்ளே கதைத்துக்கொண்டு மல்லாவியில் விட்டுவந்த செடிகளுக்காய் மாத்தளனில் அழுதுகொண்டிருக்கும் அப்பாவுக்கு எந்த வார்த்தைகளால் ஆறுதல் சொல்லமுடியும். சற்றுமுன் சிரித்தவன் சல்லடையாகச் சரிந்ததும் குளித்துக்கொண்டிருந்தவள் கிணற்று வாளியை அணைத்தபடி குருதிகுளித்துக் கிடப்பதும் விநாடிகளில் நிகழ்ந்துபோனது. கண் முன்னே மூன்று பிள்ளைகளையும் தொலைத்து விட்டு விளையாத நிலம்போல இருக்க எந்தத் தாய்க்கு மனசு வரும் 'என்னையும் கொல்லடா என்னையும் கொல்லடா' என்று அவர் வானதிரக் கத்தியது இன்றும் என் இரவுத் தூக்கங்களைத் துவம்சம் செய்கிறது.

'த பியானிஸ்ற்' என்ற ஆங்கிலப்படத்தில் வருவதுபோன்று ஒரு துண்டுச் சர்க்கரையில் ஒன்பது தேநீர் குடித்த காலமது. ஒரு குழந்தை முதன்முதலாய் பிச்சையெடுக்கப் பழகியது. பசி என்றால் யாரிடமாவது இறைஞ்சலாம் என்ற வாழ்க்கைப் பாடத்தைத் தானாகவே கற்றுக்கொண்டது. காலம் அதற்குச் சரியாய் களமமைத்துக் கொடுத்தது. மழைபெய்து மணத்த மண்வாசனையில் என்ர வீட்டு முற்றம் மணக்குது என்று முழங்காவில் முற்றத்தை முள்ளிவாய்க்காலில் மோப்பம் பிடித்த அப்பாவின் உடலின் கொஞ்சச் சாம்பலைக் கூட ஊர்ச் சுடலையில் போடாத சாபம் எனக்குப்பின் வருகின்ற தலைமுறைக்கும் நீண்டு கிடக்கிறது. 'இருந்த தேயிலையில் எங்களுக்குத் தேத்தண்ணி ஊத்தித் தந்துவிட்டுத் தாமும் குடிப்பதுபோல் வெறும் சுடுதண்ணியை அம்மாவும் அக்காவும் குடித்ததை அறிந்தவுடன் விசமாகிய தேநீரை வெளியே துப்ப முடியாமல் முண்டி விழுங்க முடியாமல் என்னைப்போல் எத்தனை தம்பிகளும் மகன்களும் முயன்றிருப்பர்.

பள்ளிக்கூடச் சேட்டை உள்ளே விடவில்லை என்பதற்காய்க் கண்டித்த கலா ரீச்சர், 'தம்பி டேய் பனையடியில அங்கர் குடுக்கிறாங்களோ....?' என்று கேட்டபடி, வீட்டுக்குப் போட்ட சோட்டியோடு வீதியில் ஓடிப்போகும் அலங்கோலம் எப்படிச் சொல்ல. கடைக்குப்போக வெட்கப்படும் என் தெருத்தோழி சித்தாராவை அவளது பாவாடைக்குள் மாங்காய்களை ஏந்திவரும் நிலைக்கு மாற்றியது அவள் வயிற்றிலிருந்த பசி எனும் நெருப்பு. அன்று வெட்கப்படும் போதெல்லாம் என்னருமைத் தோழி நினைத்திருப்பாளா இப்படிக் காலம் தன்னைத் துகிலுரிக்குமென்று...? பதுங்கியிருந்த பங்கருக்குள்ளே அப்பன், மருமகள், மகன் என உயிர்க்கூடுகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, மண்மூடிக் கடந்துவரும்போது அந்தக் கணத்திலும் அம்மா ஒருதடவை நின்று நிதானமாக அந்த மண்மேட்டைப் பார்த்துக்கொண்டாளே. அந்த நேரம் என்னவென்று நினைத்திருப்பாள். அந்த வார்த்தைகளுக்கு உயிர் இருந்திருக்குமா? திறந்துவிட்டு வந்த கோழிகளுக்காகவும் ஆடுகள் மாடுகளுக்காகவும் வீதிவரை வந்துவந்து வழியனுப்பி மீண்டும் வீட்டை நோக்கி ஓடி முற்றத்தில் கிடந்து ஊளையிட்ட சடையன் நாய்க்காகவும் இன்று மேரிப் பெரியம்மா செபிக்கும் பொழுதுகளில் செபமாலைக் கொட்டைகளுக்குப் பதில் பாறாங்கற்கள் மனசுக்குள் உருண்டு கொண்டிருப்பதை யாரறிவர்?

மடத்தடி வைரவருக்குப் பூப்பிடுங்க அதிகாலைக் கருக்கல்லுக்குள் தடுமாறும் அப்பம்மா, இந்தக் கடற்கரை மணல்வெளிக்குள் எந்தச் சாமிக்குப் பூப்பிடுங்கி என்ன பயன் என்பதாய்ப் படுக்கை பூண்டுவிட்ட நிலையை எப்படி உரைப்பேன்?, இப்படி இப்படியாய் ஒவ்வொரு கனமான ராத்திரிகளையும் கறுப்புப் பூசிக் கொண்ட பகல்களையும் வார்த்தைகளாலும் மௌனங்களாலும் நிரப்பிக்கொண்ட பசிப் பொழுதுகளையும் எப்படி நாம் நினைவழிப்பது. கடந்து வந்தவைகள் வெறும் கனவுகளா என்ன?

### கடைசி நேரப் பயணம்

எங்கள் கடைசி நேரப் பயணங்கள் வெறும் ஒரு தோல்வியையோ ஒரு வெற்றியையோ நோக்கி நகர்ந்ததென்று எவராவது நம்பினால் அவர்கள் பரிதாபத்துக்குரியவர்களே. எங்கள் இறுதியாத்திரை சத்தத்தாலும் குருதியாலும் புறப்பட்டதென்று எவராவது புலம்பினால் அவர்கள் கவலைக்குரியவர்களே. எங்கள் பயணம் உயிர்ப்பிழைப்பை நோக்கிய பறவையின் பயணம். எங்கள் பயணம் ஒரு காலவெளிச்சத்தை நோக்கிய பயணம். குருத்திலிருந்து மரம் வரைக்கும் மணற்தரைக்குள் புதைத்துவிட்டல்லவா இந்தப் பயணத்தைக் கடந்து முடித்திருக்கிறோம். பார்த்தவர்களுக்கும் தெரியாது. கேட்டவர்களுக்கும் தெரியாது. உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு யுகமுடிவும் அதன் பின்னரும்

## நிலாந்தன் எழுதிய “யுகமுடிவும் பின்னரும்” என்ற நூலின் சிங்களப் பதிப்புக்கு எழுதப்பட்ட அணிந்துரை



நிலாந்தன்

ஊழிக்காலத்தில் அல்லது ஒரு யுகமுடிவில் ஒன்றில் பதுங்கு குழியை அல்லது பிணக் குழியை அல்லது மலக்குழியை வெட்டிக் கொண்டிருந்த மக்கள் எதைச் சமைத்தார்கள்? எதைச் சாப்பிட்டார்கள்? எதைக் குடித்தார்கள்? அல்லது சாப்பிடவும் குடிக்கவும் அவர்களுக்கு நேரம் இருந்ததா? அல்லது சாப்பிடவும் குடிக்கவும் அவர்களுக்கு பசி தாகம் இருந்ததா?
உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட போர்க்களம் அதுவென்று தமிழ்ச் சிவில் சமூக அமையம் தனது அறிக்கை ஒன்றில் கூறியது. அந்நாள்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமைக்க வழியில்லாதவர்களுக்கு கஞ்சி வழங்கியது. கஞ்சித் தொட்டில்கள் ஆங்காங்கே காணப்பட்டன. உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு யுத்தத்தை நினைவுகூர உணவையே ஒரு நினைவுப் பொருளாக உபயோகிக்கலாம் என்று கூறிய தமிழ் சிவில் சமூக அமையம், முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு நினைவுப் பொருளாக அறிமுகப்படுத்தியது. இறுதிக்கட்டப்போரில் கஞ்சி மட்டுமல்ல, வாய்ப்பன் இருந்தது. பொரித்த ரொட்டி இருந்தது. பெயர் தெரியாத இலைகள் இருந்தன.

அது ஒரு யுக முடிவு. அதன்பின் எழுதிய கவிதைகளில் ஒரு பகுதியைத் தொகுத்து 2014இல் எழுநா வெளியீடாக 'யுகபுராணம்' என்ற பெயரில் வெளியிட்டேன். ஏனைய கவிதைகளை பிறகு ஒரு காலம் செதுக்கி எழுத வேண்டும் என்று எனக்குள்ளேயே ஊறவிட்டேன். ஓர் ஊழிக்காலம் என்னுள் கிடந்து ஊறியது. கிட்டத்தட்ட 10 ஆண்டுகளின் பின் பெருந்தொற்று நோய் உலகத்தைக் கவ்விப் பிடித்த போது, பத்து ஆண்டுகளாக ஊறிக் கிடந்தவற்றை மீளச் செதுக்கத் தேவையான மனோநிலையும் கால அவகாசமும் கிடைத்தன.

ஒரு யுக முடிவும் பெருந் தொற்று நோயும் ஒன்றல்ல. இறுதிக்கட்டப் போரில் உணவு இருக்கவில்லை. உயிர்ப் பாதுகாப்பு இருக்கவில்லை. ஆனால் பெருந்தொற்று நோய்க்காலத்தில் உணவு கிடைத்தது. ஒரு வைரசுக்கு பயந்து சமூகம் வீடுகளுக்குள் முடங்கியது. இறுதிக்கட்டப் போர் எனப்படுவது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமான அச்சுறுத்தல். ஆனால் பெருந்தொற்று நோய் உலகம் முழுவதுமான அச்சுறுத்தல். எனினும், இரண்டுமே வாழ்வின் நிச்சயமின்மைகளை, மனிதனின் இயலாமைகளை உணர்த்திய காலகட்டங்கள். அதனால் பத்தாண்டுகளாக கிடந்து ஊறிய கவிதைகளை எழுதி முடித்தேன்.

ஒரு சிறிய மக்கள் கூட்டத்தின் அழிவின் பின் தோன்றிய கவிதைகளும் பரிசோதனைகளும், முழு மனித குலத்துக்குமான அழிவுக்காலம் ஒன்றில் எழுதி முடிக்கப்பட்டன. இத்தொகுப்பில் இறுதிக்கட்டப் போரின் பின்னரான கவிதைகளும் ஒரு நூற்றாண்டின் பின் உலகைத் தாக்கிய பெருந்தொற்று நோய் பற்றிய கவிதைகள் சிலவும் உண்டு. பெருந்தொற்று நோய்க்குப் பின்னரான கவிதைகளும் உண்டு. 2009 இலிருந்து தொடர்ச்சியாக வந்த ஆண்டுகளில் எழுதப்பட்டவை இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது இத்தொகுப்பு வெளிவரும் இக்காலகட்டத்தில், நாடு மேலும் ஒரு போராட்டத்தைத் தின்று செமித்து விட்டு ஏவறை விட்டுக்கொண்டிருக்கிறது. பெருந்தொற்று நோயானது போரும் வைரசும் ஒன்று அல்ல என்பதை நிரூபித்தது. பொருளாதார நெருக்கடியானது யுத்த வெற்றியைச் சாப்பிடமுடியாது என்பதை நிரூபித்தது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக வந்த தன்னெழுச்சிப் போராட்டம் யுத்த வெற்றி நாயகர்களைத் தற்காலிகமாகத் தோற்கடித்தது.

எந்தக் குடும்பம் போரை வென்றதற்காக சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டதோ, அதேகுடும்பம் நாட்டின் கருவூலத்தைத் திருடிவிட்டது என்று அதே மக்களால் ஓடஓடத் துரத்தப்பட்டது. யுத்த வெற்றி நாயகர்கள் தாம் வென்று கொடுத்த நாட்டிலேயே தனது சொந்த மக்களிடமிருந்து தப்புவதற்காக படை முகாம்களில் ஒழியவேண்டி வந்தது. 2009ஆம் ஆண்டு வன்னி கிழக்கின் அழுக்கான கடற்கரையில் உலகின் மூத்த நாகரிகம் ஒன்றின் வழித்தோன்றல்கள் கஞ்சிக் கொட்டில்களின் முன்னே வரிசையாக நின்றார்கள். சரியாக 12ஆண்டுகள் கழித்து முழு நாடுமே எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமாக நாள்கணக்காக வரிசையில் நின்றது. உலகை நோக்கிக் கையேந்தி நின்றது. எந்தக் காலிமுகத்திடலில் யுத்தவெற்றிப் பீரங்கிகள் முழங்கிக் கொண்டாடப்பட்டதோ, அதே காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி சமைக்கப்பட்டது.

13 ஆண்டுகளின் முன் தனது மக்களில் ஒரு பகுதியினரைத் தோற்கடித்ததை தெருக்களில் பால்சோறு பொங்கிக் கொண்டாடிய அதே நாடு, ஐ.எம்.எப். கடன் கொடுத்தபோது பட்டாசு கொளுத்திக் கொண்டாடியது. ஐ.எம்.எப் கடனும் ஒரு பொறிதான். பொறிக்குட் சிக்குவதைக் கொண்டாடும் ஒரு நாடு? 13 ஆண்டுகளுக்கு முன் வன்னி கிழக்கில் பாதுகாப்பு வலயம் என்று கூறி மரணப் பொறிகளை உருவாக்கிய ஒரு நாடு, இப்பொழுது பேரரசுகளின் கடன் பொறிகளுக்குட் சிக்கிவிட்டது. அது இப்பொழுது பேரரசுகள் பங்கிடும் ஓரப்பம். அது இப்பொழுது போரில் தோற்றவர்களுக்குமில்லை வென்றவர்களுக்குமில்லை.





## நினைவுச் சுடரென்பது...

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் என்பது இறுதிப் போரில் கொடூரமாகக் கொல்லப்பட்டவர்களின் நினைவுகளை ஏந்தி அவர்களுக்காக அஞ்சலிக்கும் ஒரு நிகழ்வு மட்டுமல்ல. அதற்குப் பல அரசியல் பரிமாணங்கள் உள்ளன என்பது உணர்ந்து கொள்ளப்படவேண்டும்.

1. ஈழத் தமிழர்கள் தம் உரிமைக்காக, விடுதலைக்காக வீரத்துடனும் தீரத்துடனும் விடாமல் போராடினார்கள் என்பதன் அடையாள இடம் அது.
2. இறுதிப் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் இன்னும் கிடைக்கவில்லை என்று உரத்துச் சொல்கின்ற இடம் அது.
3. போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்படாமல், உண்மைகள் கண்டறியப்படாமல் குற்றவாளிகள் சுதந்திரமாகச் சமூகத்தில் உலாவ அனுமதிக்கப்பட்டுள்ள அநீதி தொடர்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் இடம் அது.
4. பேச்சு, தீர்வு என்கிற வார்த்தைகளின் கீழே சிங்கள - பௌத்த அரசுகள் தமிழர்களை மட்டுமல்ல உலக நாடுகளையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டும் இடம் அது.
5. எல்லாத் தவறுகளையும் தொடர்வதன் மூலம், மீண்டும் போர் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்கான சூழலை கொழும்பு உருவாக்கத் தவறியிருக்கின்றது என்பதை முழு உலகுக்கும் அறிவிக்கும் இடம் அது.

இத்[illegible]பாக முள்ளிவாய்க்கால் [illegible]சிக்கவேண்டும். அதுவே இன்றைய தேவையும் நாளைய தேவையும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்



விழி திறந்து
வீழ்ந்த கிணற்றினிருந்து
மீண்டு
எரி கொள்ளித் தாண்டி
இடர்களைக் கண்டு போராடிக்
களைத்த வேளையில்
கன்னத்தைத்
தடவிச் செல்கிறது
மணங்கமழ்தலுடனான
தென்றல்
களித்தது மனம்
எத்தனை இப்படிக்
கண்டேனென்று
கைக்கொட்டிச் சிரித்து நகர்கிறது
காலம்!

-கிருஷ்ணன்-

## சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி வேட்பாளர்

ஐ.ம.சக்தி அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு நேற்றுமாலை கூடியது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். எனினும் கோத்தாபய ராஜபக்சவிடம் தோல்வியடைந்தார். இதன் பின்னர் 2020 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு சஜித் தலைமையிலான அணியினர் தனிவழி சென்றனர். இதன் பின்னரே ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவா அல்லது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவா போட்டியிடுவார் என்பது தொடர்பில் நீண்ட நாள்கள் குழப்பம் நிலவியது. இந்தக் குழப்பம்தான் தன் தோல்விக்குக் காரணம் என்று சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)


### திருவிழாக் கால கடைகள் ஏலம்

அளவெட்டி, கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
திருவிழா 24.05.2023 அன்று
ஆரம்பிப்பதையொட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை
(21.05.2023) முற்பகல் 10 மணிக்கு திருவிழாக்
கால கடைகளுக்கான ஏலம் இடம்பெறும்.

- தர்மகர்த்தாக்கள் சபை -

### விற்பனை உதவியாளர், தொழிலாளிகள் தேவை

விண்ணப்பிக்க விரும்புவர்கள் 22.05.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு நேரில் சமர்ப்பிக்கவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
077 168 4041
021 222 0032

CR 39857) A-1

### கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிர்தேச சபையில் எம்முடன்
கடமையாற்றி கடந்த 17.04.2023 அன்று
இறைபதமடைந்த எமது நண்பன்
**தாமோதரம்பிள்ளை**
**அருமைநாதன்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**உடன் பணியாற்றிய அலுவலர்கள்**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை**

(CR/39848) AH-1

### கண்ணீரில் கரைந்த ஈரவிழியில் 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி நாகரத்தினம் கணேஸ்வரி (தேவி)**



அன்னை மடியில் அவதரிப்பு
20.10.1950

ஆண்டவன் அடியில் சரணடைவு
19.05.2016

திதி: திரியோதசி [17.05.2023]

பேசியும், புரியாத உறவுகளுக்கு மத்தியில்
பேசாமல் புரிந்து கொள்ளும் உறவு "அம்மா"....
உனக்காக கவிதை எழுத எண்ணினேன்
தீர்ந்தது எனது பேனா மையும் புத்தகங்களும்
- மட்டுமே "அம்மா"....

மூன்று எழுத்தில் "அன்னை" என அழைத்தேன்
இரண்டு எழுத்தில் "தாயே" என எழுதினேன்
ஓர் எழுத்தில் எழுத எண்ணினேன் வரவில்லை
எனக்கு வார்த்தைகள் "ஆ" என அழுதேன்
ஓடி வந்தாள் என் அன்னை,
நாம் பிறக்கும் போது உன் தொப்புள் கொடியை
வெட்டியது நம்மைப் பிரிக்க அல்ல அம்மா
என்னைப் பெற்ற உன்னை
பாராட்டி வெட்டும் "றிபன்" அம்மா.....!
கோடி உறவுகள் இருந்தாலும் அம்மா உன்னை
மிஞ்சிய உறவு ஏதும் இவ் உலகில் இல்லை.
ஏழு ஆண்டுகள் என்ன ஏழாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உன் இனிய நினைவுகளுடன்
எங்கள் மீதி காலங்கள் நகரும் அம்மா.....

ஓம் சாந்தி ....! ஓம் சாந்தி !!..... ஓம் சாந்தி !!!

**உன் பிரிவால் துடிதுடிக்கும்**
**உன் பாசமுள்ள கணவர்,**
**பாசம் மிக்க பிள்ளைகள்,**
**அன்பான மருமக்கள்**
**உங்களைத் தேடும் உங்கள் பாசப் பேரப்பிள்ளைகள்.**

**தொம்பை வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

(cr. 38118) (2.0)

# மரண அறிவித்தல்

# திருமதி அப்புத்துரை கமலாம்பிகை

தோற்றம் 16.10.1934

மறைவு 15.05.2023



நல்லூர், செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை கமலாம்பிகை நேற்றுமுன்தினம் (15.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை அப்புத்துரை (ஜெயலிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், சின்னத்துரை - தங்கம் தம்பதிகளின் மருமகளும், அமரர் செல்வராசா காலஞ்சென்ற சிவகெங்கை (கங்கா), சோதிராசா (பெல்ஜியம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜோதிக்குமார் (Hawaii), சுமதி (பெல்ஜியம்) ஆகியோரின் மைத்துனியும், கணேசலிங்கம் (சிறி - பிரான்ஸ்), ஜெயலிங்கம் (ரவி - டென்மார்க்), அருணேஸ்வரி (பிரான்ஸ்), சண்முகலிங்கம் (இத்தாலி), சத்தியலிங்கம் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் மேனகா (டென்மார்க்), சந்திரலிங்கம் (பிரான்ஸ்), சாந்தகுமாரி (இத்தாலி), இராசமலர் (பிரான்ஸ்), சுமதினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்ஜீவன் - நீலாயதாட்சி, விஜய் - ஷாமந்திக்கா, துஷ்யந்தன் - சஜிந்திக்கா ஆகியோரின் அம்மம்மாவும், புருஷோத்தமன் - இந்துஷா, குணேசன் - சிந்து, ரகுராம் - பைரவி (டென்மார்க்), துரிஷன், துரிந்தா (இத்தாலி), சிந்துஷன், சந்தியா (பிரான்ஸ்), மிதுனியா, அகல்யா, கமலியா (லண்டன்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், அனுருத்ரா, சாயிருத்திரா, நவியா, வினேஸ்கா, விசாலினி, அர்ச்சனா, ஆராதனா, அக்ஷயா, அகிலன் (கௌதம்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் செட்டித் தெருவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக நண்பகல் 12 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**82/28, செட்டித்தெரு,**
**நல்லூர்.**

(CS/50451)AH-1

**021 222 5283**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகமறதியும் உளவியலும்

வெற்றிவேல் சக்திவேல்



நினைவாற்றல் மூளையோடு தொடர்புடையது. சிறுவர்களது சிந்தனை வளர்ச்சி பற்றி ஆராயும்போது உடல், உள, சமூக ஆன்மீக சமநிலையானது ஆரோக்கியமான அறிவியல் வளர்ச்சியில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில், மாணவர்களது சிந்தனா சக்தியில் சமூக உளவியல் சார்ந்த பிரச்சினைகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மூளையில் காணப்படும் இணைக்கும் பரப்புகள் கற்பதுடன், ஞாபகம், விவேகம், விளங்கல் ஆகியவற்றுடன் தொடர்பான உயர் நிலையங்களாகத் தொழிற்படுகின்றன. பெருமளவு செய்திகளைச் சேமிக்கும் ஆற்றல், அவற்றைச் சேர்ந்து தொழிற்படுத்தும் ஆற்றல், சிந்திக்கும் ஆற்றல் ஆகியவை இணைக்கும் பரப்புகளுடன் தொடர்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன. குருதிக் கலன்களுக்கும் நரம்புக் கலங்களுக்குமிடையே தொடர்பை உண்டாக்குகின்ற நரம்பு பசையிழையக் கலங்கள் நினைவாற்றலுக்கான களஞ்சியமாக தொழிற்படலாம் எனக் கருதப்படுகின்றது. உடற்றொழில் ரீதியாகப் பார்க்கும்போது மூளைக்குச் சிறந்த குருதி விநியோகமும் பிராணவாயு விநியோகமும் நினைவாற்றலை பொறுத்தவரை முக்கியமான காரணிகளாக அமைகின்றன. சிறுவயதில் ஞாபகசக்தி அதிகமாகக் காணப்படுகின்றது. வயது முதிர்ச்சியடையும்போது மூளைக்கான குருதி விநியோகம் சீரின்மையடையின் ஞாபகமறதி ஏற்படக் கூடியதாயுள்ளது.

குறிப்பிட்ட செயலைச் செய்வதற்குரிய முதிர்ச்சியை அடைய முன்னரே அதனை நிறைவேற்றுவதற்குரிய பயிற்சியை வழங்குதலும், உரிய முதிர்ச்சி பெறுங்காலத்தில் உரிய பயிற்சியை வழங்காது விடுதலும், குழந்தையின் கல்வி வினைதிறன் குறைந்து, மறதி போன்ற உளவியல் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். மேலும் சிறுவர்களது கல்வியில் கோபம், பயம், மகிழ்ச்சி, அன்பு போன்ற மனவெழுச்சிகள் தாக்கத்தை ஏற்படுத்துவதால், மனவெழுச்சி முதிர்ச்சியோடு சார்ந்த கற்றலில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. மகிழ்ச்சி, அன்பு ஆகிய மனவெழுச்சிகளோடு இணைந்த கல்வியானது சிறுவர்களது நினைவுத் திறனை அதிகரிக்கச் செய்வதோடு கல்வியில் ஆளுமைத் திறனையும் அதிகரிக்கின்றது.

கற்பவற்றை மனதிலே பதித்துத் தேவையானபோது மீட்டெடுப்பது நினைவு கூர்தல் எனப்படும். நினைவு கூர்தலானது கற்றல், மனதிலே பதித்தல், மீட்டெடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டதாக அமைகின்றது. இவற்றில் ஒரு பகுதி பாதிக்கப்படின் மறதி ஏற்படுகின்றது. மனதிலே பதித்தலானது மூளையின் செயலியக்கங்களுடன் தொடர்புடையது. மனத்திலே பதித்தலை கற்றலுக்கு முன்னான தடைகளும், பின்னான தடைகளும் பாதிக்கின்றன.

பயன்பாடின்மை, முன்னோக்குத் தடை, பின்னோக்குத்தடை, முதிர்ச்சி, உடல், உளநோய்கள், மனவெழுச்சிப் பிரச்சினைகள், விபத்துக்கள் ஆகியன மறத்தலை உண்டாக்கும் காரணிகளில் முதன்மையானவை. சாதாரணமாகக் கல்வி கற்கும் சிறார்களிடையே நினைவு கூர்தல் வீதத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது கற்றவுடன் மறத்தல் வீதமானது அதிகமாகவும், நாட்செல்ல மறக்கும் வீதமானது குறைவாகவும் காணப்படுகின்றது.

'கற்றல் என்பது நிபந்தனைப்படுத்தலுக்கான தெறிவினைகளின் தொடர்ச்சி' என்று 'பவ்லோ' என்னும் உளவியல் விஞ்ஞானி தமது கோட்பாட்டில் குறிப்பிடுகின்றார். இந்தக் கொள்கையின் அடிப்படையில் தூண்டியை மேலும் தூண்டும்போது மிகவும் சக்தியுள்ள துலங்கலைப் பெற முடியும் எனக் கண்டார். இதனடிப்படையில் ஒவ்வொன்றையும் அடிக்கடி நினைத்துப் பார்க்கும் பழக்கம் ஏற்படின் நினைவாற்றல் குன்றாது. கல்வி கற்கும்போது வேறிடத்தில் மனம் செலுத்தாமை, செயலில் ஊன்றிய கவனம், அவதானம், கற்பதை மறப்பதில்லை என்ற தன்னம்பிக்கை, பொருளறிந்து கற்றல், ஆழ்ந்து ஈடுபட்டுக் கற்றல், மீளக் கற்றல், உற்று நோக்கிக் கற்றல், தொடர்புபடுத்திக் கற்றல், இடைவிட்டுக் கற்றல், பிரயோக நிலைக்கற்றல் என்ற செயற்பாடுகள் நினைவாற்றல் வீதத்தை அதிகரிக்கும் காரணிகளாக அமைகின்றன. செயலில் ஊன்றிய கவனம் இருப்பின் மறத்தல் அரிது. பெற்றோர் சிறுவர்கள் மீது திணிக்கும் திறமைக்கும் மீறிய அதிக எதிர்பார்ப்புக்கள் மறத்தல் வீதத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிகள் நினைவு கூர்தலை அதிகமாக்குகின்றன. மேலும் தியானம், யோகாசனம் போன்ற செயல்முறைகளால் நினைவுத்திறன் அதிகரிப்பதோடு மூளை அலை அதிர்வில் அல்பா சீர்பிரமாண அலைவரிசை ஒழுங்காகக் காணப்படுவதாக அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. உடல்நோய்கள், உளநோய்கள், உணவுப் பற்றாக்குறை, மனச்சோர்வு, வினைதிறனற்ற கற்பித்தல் முறைகள் ஆகியன கவனக்குறைவை ஏற்படுத்துவதோடு நினைவுகூர்தலைப் பாதிக்கச்செய்கின்றன. ஐன்சிடின் காரணிகள் போன்ற ஆய்வியல் விஞ்ஞானிகளிடமும் மறதிப் பிரச்சினைகள் இருந்ததை அவர்களது வாழ்க்கை வரலாறு மூலம் அறிகிறோம். எனவே ஞாபகக் குறைவுடைய சிறார்கள் அதனைப்பற்றி அச்சம் கொண்டு தயங்காது தகுந்த உள ஆய்வாளரை சந்தித்து மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.

### உளநோய்களும் ஞாபக மறதியும்

ஒவ்வொருவருடையமனோநிலை உறுதியைப்பொறுத்தும், பண்பியல் தொகுப்பைப் பொறுத்தும் மனநலம் அமைகின்றது. மனநோயாளர்களில் சிலர் மறதிப் பிரச்சினைகளைக் கொண்டிருப்பர். சிலர் நன்கு அறிமுகமான மனிதர்களைப் புதிதாகப் பார்ப்பது போலவும், பழக்கமில்லாத மனிதர்களை ஏற்கனவே தெரிந்தது போன்றும் உள்ளனர். வேறு சில நோயாளிகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி எதுவும் ஞாபகத்தில் இருப்பதில்லை. தன்னை மறந்த நிலையில் பல இடங்களில் சுற்றி அலையும் நிலையும் மன நோயாளர்களில் அவதானிக்கலாம். உள நெருக்கடியினால் நித்திரையின்மை எனும் நிலை ஏற்படுமாயின் மறதி ஏற்படலாம். பயம், பதற்றம், ஆகிய நிலைகளாலும் ஞாபகமறதி ஏற்படுகின்றது. பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களில் பய, பதற்ற உணர்வுகளால் நினைவிழத்தல் அதிகரிக்கின்றது. 'நரம்புத் தளர்ச்சி' எனும் உளநோயில் ஞாபக மறதிப் பிரச்சினை காணப்படுகின்றது. 'பயபதற்றநோய்' எனும் நிலையில் அன்றாடம் செய்ய வேண்டிய நிகழ்ச்சிகளை மறக்கும் நிலை காணப்படுகின்றது. 'ஹிஸ்டிரியா' எனும் நோயில் ஞாபகமறதி முக்கியமான பிரச்சினையாகி தான் யாரென்று மறந்துபோதல் என்ற நிலை காணப்படுகின்றது. தனது பெயர், முகவரி, குடும்பத்தவர் விபரம், கடந்தகால வாழ்க்கை ஆகிய விடயங்கள் யாவுமே நினைவுக்கு வருவதில்லை. ஆனால் கல்வி, பழக்கவழக்கம் போன்ற விடயங்கள் நினைவில் இருக்கும். தான் செய்த கொடிய குற்றங்களை மறப்பதற்கு முயன்றதன் விளைவாகவும் இவ்வகைப்பட்ட ஞாபகமறதி ஏற்படுவதுண்டு. இவர்கள் தம்மை மறந்து பல இடங்களில் அலைந்து திரியலாம்.

மூளைப் பாதிப்பால் ஏற்படும் திடீர் மன நோய்களில் முன்னர் நடந்த விடயங்கள் தெளிவாக நினைவுக்கு வருவதில்லை. ஆனால் 'வெர்னிக்ஸ் மனக்குழப்ப நோயில்' அண்மைக்கால நிகழ்ச்சிகள் ஞாபகத்துக்கு வருவதில்லை. ஆனால் முன்னர் நடந்த நிகழ்ச்சிகள் நன்குநினைவில் இருக்கும். 'அதிக நாட்பட்ட மூளைப்பாதிப்பு நோய்களில்' முதலில் அண்மைக்கால நிகழ்ச்சிகளும் நாளடைவில் கடந்தகால நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வருவதில்லை. வலிப்பு எனும் நோய் நிலைமையில் வலிப்பின்போது நடந்த நிகழ்வுகள் நோயாளி தெளிவு பெற்றபின் நினைவுக்கு வருவதில்லை.

மது அடிமையினால் விற்றமின் பி. உடலில் குறைவதால் 'கோர்சகாவ் மனநோய்' எனும் நிலை ஏற்படுகின்றது. அதன்பின் எந்த நிகழ்ச்சிகளும் மனதில் பதிவதில்லை. இதில் சமீபகால நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருவதில்லை. கடந்த கால நிகழ்ச்சிகள் நினைவில் இருக்கும். உதாரணமாக சிறிது நேரத்துக்கு முன் உணவு அருந்தியதையே மறந்துவிடுவர். சற்றுமுன் செய்தித்தாளில் படித்த விடயங்களை மறப்பதால் திரும்பத்திரும்ப செய்தித்தாளைப் படிப்பர். நன்கு பழகியவர்களைக்கூட மறந்து விடுவர். போதைப் பொருள்களினாலும் மறதி ஏற்படும். கவனக்குறைவு, ஞாபகசக்திக்குறைவு ஆகியவற்றைச் சீர்ப்படுத்துவதற்கு வெண் பூசனி, குமிழங்காய், வல்லாரை, நீர்பிரமி நெய், வெண்டிக்காய் ஆகியவற்றுடன், உள்ளத்தைச் சீர்ப்படுத்தும் விளையாட்டுக்கள், தியானம், யோகாசனம், பிராணாயாமம், கவனத்தனச் சீர்ப்படுத்தும் பயிற்சிகள் ஆகியவற்றை பின்பற்றலாம்.

மறதியால் ஏற்படும் பிரச்சினைகளை உணர்ந்து நினைவு கூர்தலை அதிகரிக்கச் செய்யும் உளவியல் சார்ந்த கற்றல் முறைகளைக் கடைப்பிடிப்பது இன்றைய நெருக்கடியான கால கட்டத்தின் தேவையாகும்.



பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வில்வரசனின் "பசி உறு நிலம்" கவிதை நூல் வெளியீடு கிளிநொச்சி பிரதேசசபை மண்டபத்தில் கடந்த 14ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய தமிழ் ஆசிரிய ஆலோசகர் லோகேஸ்வரன் தலைமை தாங்க யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு நூலினை அறிமுகம் செய்து வைத்தார். நூலிற்கான ஆய்வுரையை கவிஞர் தீபச்செல்வன் நிகழ்த்தியிருந்தார். தொடர்ந்து நூலாசிரியர் வில்வரசனின் ஏற்புரையுடன் நூல் அறிமுக நிகழ்வு நிறைவு பெற்றது. (21)

புத்தகங்களை விட சிறந்த நண்பன் வேறில்லை என்பதை புத்தகப் பிரியர்கள் மனமார ஒப்புக்கொள்வார்கள். அதேபோல, என்பது ஒருவகையான நூலகம் போல இருக்கும் என்றே எப்போதும் கற்பனை செய்திருக்கிறேன் என்று லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் ஜார்ஜ் போர்ஹேவின் கருத்தையும் குதூகலத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்.

ஒரு புத்தகம் என்பது கடந்த காலத்துக்கும், எதிர்காலத்துக்குமான இணைப்பு, தலைமுறைகள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையிலான பாலம் என்கிறது யுனெஸ்கோ அமைப்பின் உலக புத்தக தினம் தொடர்பான இணையப் பக்கம்.



புத்தகங்கள் ஒட்டுமொத்த மனித குலத்தை ஒரு குடும்பமாக இணைக்க உதவுகின்றன என்றும், மனித குலத்தின் இலட்சியங்களை பிரதிபலிக்கும் வகையில் சேர்ந்திசை போல ஒலிக்கும் குரல்களை கொண்டாடும் நோக்கத்துடன் உலக புத்தக மற்றும் காப்புரிமை தினம் அமைந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

* புத்தக தினமாக ஏப்ரல் 23ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.
* உலக புத்தக தினத்தை முன்னிட்டு உலகம் முழுவதும் புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சி, கருத்தரங்குகள் உள்ளிட்ட பலவேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.
* 1995 இல் முதல் உலக புத்தக தினம் கொண்டாடப்பட்டது.
* உலக புத்தக தினத்தை முன்னிட்டு 2001ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட ஒரு நகரம் உலக புத்தக தலைநகராக தேர்வு செய்யப்பட்டு, புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.
* ஸ்பெய்னின் மாட்ரிட் முதல் உலக புத்தக தலைநகரமாகத் தேர்வு செய்யப்பட்டது.
* இந்தியா உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் புத்தக தினம் கொண்டாடப்படுகிறது.
* உலக புத்தக தினத்தை முன்னிட்டு டுவிற்றரில் #BookDay எனும் ஹாஷ்ராக்குடன் புத்தகப் பிரியர்கள் மற்றும் எழுத்தாளர்கள் குறும்பதிவுகளை வெளியிட்டு வருகின்றனர்.
* உலக புத்தக தினத்தை முன்னிட்டு சர்வதேச புகைப்படப் போட்டியும் யுனெஸ்கோவால் நடத்தப்படுகிறது.
* #WordsonTolerance எனும் ஹாஷ்ராக் மூலம் சமூக ஊடகங்களில் புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் பிரச்சார இயக்கமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மண்ணில் என்ன தோன்றக்கூடும் மழையில்லாத போதுமனிதனோ பிறகுமே தாயில்லாமல் ஏது' என்றவொரு அருமையான பாடல் வரிகள். உண்மையிலே தத்ருபமான வரிகள். மழையில்லாமல் இயற்கை வளமே இல்லை. அன்னை இல்லாமல் உறவுகளே இல்லை எனலாம்.

# தாய்மை எனும் மகிமை!

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. உண்மை தான். எழுத்தறிவித்தவன் இறைவன் என்றால் அந்த இறைவனையே அறிமுகப்படுத்தியவன் எவ்வுயிர்க்கும் அன்னையாகவே இருக்கவேண்டும். எம் மதமாக இருந்தாலும் தத்தம் வழிபாட்டுக்குரிய இறைவனை சிறுபராயம் தொட்டு அறிமுகம் செய்தவள் என்றால் அது அன்னையாகவே இருக்கும் எவ் உறவாக இருந்தாலும் உறவுகளின் சிறப்புக்களை சிறுவயதில் இருந்து சொல்லித் தந்து காண்பித்தவரும் அன்னையாவார்.

ஒரு பெண்ணானவள் குழந்தையை கருவில் சுமக்கும் காலம் தொடக்கம், அதற்கு உருவம் கொடுத்து தன் பிள்ளையின் உடல் - உள் விருத்தியில் பங்கு பற்றுகின்றாள்.

அதாவது தாய்மை அடைந்த பின்னரே பெண் பெருமளவில் அன்பு, பொறுமை, கருணை, இரக்கம், சகிப்புத் தன்மை என எதையும் தாங்கும் மனோ தைரியம் பெறுகின்றாள். தன்னலம் கருதாது குடும்பத்துக்காகவும் பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றவும் இரவு - பகல் பாராது உடல் உழைப்பால் மிகத் துரிதமடைகின்றாள்.

தாய்மையின்போது மனோ தைரியத்திணைப் பெறும் பெண்ணானவள், உடல் வலிமையையும் தாங்கு திறனையும் அடைகிறாள் என்றால் தாய்மையானது எத்தகையதொரு சிறப்புக்குரியது. தாய்மையின் மூலமே பெண்கள் இவ்வாறானதொரு மேன் நிலை அடைகின்றார்கள்.

தன் பிள்ளை நோயுற்றிருந்தாலோ,

அரியாலையூர் மிசாந்தி செல்வராஜா

தவறு செய்தாலோ எது எவ்வாறாக இருந்தாலும் தவறுகளைச் சுட்டிக் காட்டி பிள்ளையின் நோய்க்கு மருந்தாகவும் தன் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்துக் கொண்டிருப்பவள் அன்னை என்றால் அதற்கு மாற்றுக்கருத்து இருந்துவிடமுடியாது. தாய்மை என்பது வருடத்தில் ஒரு நாள் நினைத்துப் பார்க்கும் விடயமல்ல.

வருடத்தின் ஒவ்வொரு நாளும் கொண்டாடித் தீர்க்கும் விடயமே. தாய்மை இல்லையேல் ஏது இவ்வுலகு.





# சதாவதானி கதிரைவேற்பிள்ளை

## புலோலி மண் ஈன்றெடுத்த சைவத்தமிழ்க் காவலர்

தமிழ்கூறும் நல்லுலகமானது காலத்துக் காலம் அந்நிய ஆதிக்கத்துக்கு உட்பட்டு அழிவடைந்த வேளைகளில் செந்தமிழ் மொழிக்கொரு நந்தாமணி விளக்காய் சந்ததியை வாழவைக்கும் சைவத்தின் காவலராய் தம்மையே அர்ப்பணித்து தொண்டாற்றிய தமிழ் மூதறிஞர்கள், புலவர்கள் பலரைத் தந்த புலோலி மண்ணில் நாகப்பிள்ளையும் சிவகாமி அம்மையாரும் சைவத் தமிழ் உலகும் செய்த தவப் பயனாய் 1871ஆம் ஆண்டு மார்கழி மாதத்து மூன்றாம் நாளில் இவ்வுலகில் அவதரித்தவரே நம் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையாவார்.

தமது இளமைக் காலம் முதலே சைவத் தமிழ் பற்றுடையவராய் விளங்கிய இவர் தமது ஆரம்பக் கல்வியை நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்றார். அத்துடன் நாவலரின் நன் மாணாக்கர்களாகிய தியாகராசபிள்ளை, சதாசிவப் பிள்ளை ஆகியோரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் சைவசித்தாந்தத்தையும் கற்று பண்டிதராய், ஆசிரியராய் அங்கு கடமையாற்றிவிட்டு தமது 21ஆவது வயதில் தமிழகத்தை நாடினார்.

### தமிழுக்காய் தமிழ்நாட்டில்

இவரது காலத்தில் தமிழ் உலகம் ஆங்கில ஆட்சியில் அடிமைபட்டு சைவமும் தமிழும் பெரும் சவால்களைச் சந்தித்துக் கொண்டிருந்தவேளையில் இந்த அழிவுகளில் இருந்து சைவத்தையும் தமிழையும் காக்க தனியொருவராய் தமிழ்நாட்டில் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. தமிழகத்தில் காசிவாசி செந்தில்நாதையர் கனகசுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் கற்றுத்தேர்ந்த இவர் அங்கு தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றினார். அங்குதான் ஆங்கிலம் கற்றுவந்த வி.கல்யாணசுந்தர முதலியாரை தமிழ்த் தென்றலாக்கி தன் தலை மாணாக்கர் ஆக்கினார். இதுபற்றி குறிப்பிடும் தி.வி.கவும் 'எனக்கு கல்விக்கண் திறந்தவர் மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையே' என்கிறார்.

இவரது சைவப் பணிகளில் பல நாவலர் அரிச்சுவட்டில் அவர் விட்டகுறை தொட்ட குறை தொடர்வனவாய் அமைந்தன. அந்த வகையில் ஆலய வழிபாடுகளை நெறிப்படுத்தியமை, திருமுறை ஓதும் பழக்கத்தை ஏற்படுத்தியமை, ஆலயங்கள் தோறும் சென்று சமயப் பிரசங்கங்கள் மூலம் மக்கள் மத்தியில் சமய நம்பிக்கையை ஏற்படுத்தியமை; வள்ளலாரின் பாடல்கள் அருட்பாக்கள் அல்ல மருட்பாக்களே என நீதிமன்றம்வரை சென்று வாதாடி வென்றமை, ஆரணி சமஸ்தான வித்துவானாய் இருந்து அரும்பணிகள் பல செய்தமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் தனது நிறைந்த சைவ சித்தாந்த புலமை காரணமாகவும் பக்தி உணர்வாலும் பல சமயநூல்களை எமக்கு ஆக்கி அளித்ததுடன் பல நூல்களுக்கு சிறப்பான உரைகளை எழுதி வெளியிட்ட சிறப்பும் இவரையே சாரும்.

இந்த வகையில் இவரால் இயற்றப்பட்ட சமய நூல்களாக சுப்பிரமணிய பராக்கிரமம், சிவஷேத்திரலாய மஹோற்சவ விளக்கம், சைவசந்திரிகை சைவசித்தாந்த சுருக்கம், கருவூர்மாமியம், புதுச்சந்திப் பிள்ளைத் தமிழ் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உரை எழுதிய நூல்களாக பழனித் தல புராண உரை சிவராத்திரி புராண உரை, நைடத உரை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய இவரது சமயப் பணிகளுக்கு மதிப்பளித்து தமிழக அறிஞர்கள் இவருக்கு மாயாவாத துவம்ச கோடரி, அத்துவித சித்தாந்த மஹோத்தாரணார், சித்தாந்த மகா [illegible] பல பட்டங்களை வழங்கி மதிப்பளித்தனர்.

தமிழகம் சென்ற பிள்ளை இடையிடையே தன் ஊருக்கும் வந்து சென்றுள்ளார். அந்த வகையில் ஊரவரான சிவஞானவதி என்பவரைத் திருமணம் செய்து சிவஞானாம்பிகை திருநாவுக்கரசு ஆகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தார் என்றும் அறியமுடிகிறது இன்றும் மேலைப்புலோலியில் இவரது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருவதும் சிறப்பான விடயமாகும்.

### கதிரைவேற்பிள்ளையின் அகராதிப்பணிகள்

கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ப் பணிகளுள் தலையாய பணியாய் விளங்குவது அவரது அகராதிப் பணியே ஆகும். இருமொழி அகராதிகள் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் ஒருமொழி அகராதியாய் தமிழ்ப் பேரகராதியை முதன்முதலாக்கிய பெருமை கதிரைவேற்பிள்ளையையே சாரும். மதுரை தமிழ்ச்சங்க வெளியீடாக ஆயிரத்து 636 பக்கங்களில் இந்த அகராதி வெளிவந்தது. தமிழ்மொழிபற்றி ஆய்வு செய்யும் மேலைத்தேச மொழியியல் அறிஞர்களுக்கு இது பேருதவியாய் அமைந்துள்ளதுடன் ஈழத்து புலமை ஆழத்துக்கு உலகில் ஓர் அங்கீகாரத்தினையும் தந்துள்ளதாக பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் தமது 'அகராதி தந்த சதாவதானி' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பல நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்ட இவரது பணியும் சிறப்புக்குரியது. அந்தவகையில் பழனித்தலபுராண உரை, நைடத விருத்தியுரை, சிவராத்திரி புராண உரை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவர் தமது 30ஆவது வயதில் சென்னை இலட்சுமி விலாச மண்டபத்தில் பலரும் வியக்கும் வண்ணம் நூறுவிடயங்களை அவதானித்து பதில் சொல்லி நிகழ்த்திக் காட்டிய சதாவதானம் இவரை சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஆக்கியது. 36 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த பிள்ளை 1907ஆம் ஆண்டு பங்குனி மக நட்சத்திர நாளில் நீலகிரியில் கொடிய வெஞ்சுர நோயால் பீடிக்கப்பட்டு மாதப்பிறைக் கண்ணியானை என்ற தேவார இசையுடன் சிவப்பேறு அடைந்தார்.

இந்தக் குறுகிய காலத்தில் இவர் ஆற்றிச் சென்ற சைவத் தமிழ்ப் பணிகள் இன்றும் சைவத்தையும் தமிழையும் வாழ்வித்துக் கொண்டிருக்கும் சிறப்பு வாய்ந்தனவாய் விளங்குகின்றன.

இவரது ஊராகிய மேலைப்புலோலியில் இவரது நாமம் கொண்டியங்கும் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் ஆண்டுதோறும் மாணவர்க்ளிடையே பல போட்டிகளை வைத்து பரிசில்கள் வழங்கி இவரது குருபூசைவிழாவை சிறப்பாகக் கொண்டாடிவருகிறது.

அதில் ஈழத்தின் தலைசிறந்த தமிழ் அறிஞர்களும் கல்வியியலாளர்களும் கலந்து சிறப்பித்து வருகின்றனர். சதாவதானியின் வரலாற்றையும் பணிச் சிறப்புக்களையும் வி.க.கா.சி.குலரத்தினம், பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ், பேராசியர் ஸ்ரீபிரசாந்தன், பெரிய ஐங்கரன் போன்றோர் தமது நூல்கள் வழி ஆவணப்படுத்தியுள்ளனர். செந்தூரன் விருபா குமரேசன் போன்றோர் சதாவதானி ஆவணக் காப்பகம் மூலம் பல அரும்பணிகளைச் செய்து வருகின்றனர். இவரது சைவப் பூரண சந்திரிகை, சிவஷேத்திரலாய மஹோற்சவ உண்மை விளக்கம் ஆகிய இரு நூல்களை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் செல்வ மனோகரன் பருத்தித்துறை நண்பர்கள் வட்டம் மூலம் மீள் பதிப்புச் செய்துள்ளார். சதாவதானியின் 116ஆவது குருபூசை நாளில் அவரது பணிகளும் ஆவணங்களும் இன்னமும் சரியான முறையில் ஆய்வுகளுக்கும் ஆவணப்படுத்தல்களுக்கும் உட்படுத்தப்படவேண்டும் என்பது காலத்தின் வலியுறுத்தலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யாரையும் தாக்கவுமில்லை: தலைமறைவாகி ஒளியவுமில்லை!

## சொல்கிறார் ஆர்னோல்ட்

யாழ்ப்பாணம், மே 17

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்துக்குள் வைத்து இடம்பெற்றதாகச் சொல்லப்படும் கைகலப்பு விவகாரத்தில், தான் தலைமறைவாகவில்லை என்று திட்டவட்டமாக மறுத்துள்ளார் ஆர்னோல்ட்.

கட்சி அலுவலகத்தில் வைத்து ஆர்னோல்ட் தன்னைத் தாக்கினார் என்று ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் இதுவரை ஆர்னோல்ட் கைதுசெய்யப்படவோ அல்லது அவரிமிருந்து வாக்குமூலம் பெறப்படவோ இல்லை. இதனால், ஆர்னோல்ட் தலைமறைவாகியுள்ளார் என்று ஒரு தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், அந்தக் கருத்துக்களை ஆர்னோல்ட் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சிக் கூட்டத்தில் நான் எவரையும் தாக்கவும் இல்லை. தலைமறைவாக வேண்டிய தேவையும் எனக்கில்லை. வவுனியாவில் கட்சிக் கூட்டத்துக்காக நான் சென்றிருந்தபோது பொலிஸார் என்னைத் தேடிவந்தனர் என்ற விடயம் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் நான் கொழும்புக்கு வந்துள்ளேன். யாழ்ப்பாணப் பொலிஸாரும் என்னுடன் உரையாடியுள்ளனர். அவசரமான விடயமென்றால் உடனடியாக யாழ்ப்பாணம் திரும்புகின்றேன். இல்லையேல் ஓரிரு தினங்களுக்குள் வந்து அலுவல்களை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்ப அனுமதிக்குமாறு பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டேன். இதற்குப் பொலிஸாரும் சம்மதித்தனர். மற்றும்படி பொய்யான குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அதற்காக ஏன் நான் தலைமறைவாகவேண்டும்? தலைமறைவாக இருக்கும் ஒருவர் எவ்வாறு பொலிஸாருடன் தொடர்பில் இருப்பார்? எவ்வாறு ஊடகங்களுக்குப் பதில் வழங்குவார்? மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவரின் மருத்துவப் பரிசோதனையில் உண்மை தெரியவரும் - என்றார். (அ-ம-26)

# 2032இல் இலங்கையில் அணுமின் நிலையம்

எதிர்வரும் 2032ஆம் ஆண்டில் ரஷ்யாவின் உதவியுடன் இலங்கையில் அணுமின் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இலங்கையின் அணுசக்தி சபையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கொட்டேகொட நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அணுமின் நிலையம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று நாடாளுமன்ற நிலையியல் குழுக்கூட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போதே 2032ஆம் ஆண்டில் ரஷ்யாவின் உதவியுடன் இலங்கையில் அணுமின் நிலையம் அமைப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளது.

அணுசக்தி தொழிற்றுறையில் அணு சக்தி சபையால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. வெளிநாடுகளில், குறிப்பாக தென்கொரியாவில் அணுசக்தி துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கான கேள்வி அதிகமாகவுள்ளது. இவ்வாறான பின்புலத்திலேயே இளைஞர்களுக்கு இது தொடர்பான பயிற்சிநெறிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சவூதி அரேபியா 10 பில்லியன் தென்னைகளை நடவுள்ள நிலையில், இதற்காக தொற்று நீக்கப்பட்ட தென்னந்தும்பை வழங்குமாறு இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தத் தொற்றுநீக்கல் நடவடிக்கையை அணுமின் அதிகாரசபையை வைத்து மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது பரிசீலிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

# பெரியபுராண சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு, நாயன்மார் குருபூசை, காரைக்கால் அம்மையார் குருபூசை என்பன சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

சேக்கிழார் பெருமான் , காரைக்கால் அம்மையார் குருபூசையைத் தொடர்ந்து "இறைவனருளால் கனி பெற்ற அம்மையார்" என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேலின் சொற்பொழிவு நடைபெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டும் பரிசில்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஆன்மீக விருந்தினர் உரையும், குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (எ-றி)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது. பரிபாலன சபைத் தலைவர் த.சோதி லிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கைலநாதன் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் தொனிப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-றி)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் உப அதிபர் க.இந்திரராசா அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சிவபாக்கியம் கந்தசாமி**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

தோற்றம்:- 03.02.1944
மறைவு:- 15.05.2023

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.

(CR/39848)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1945



மறைவு 16 . 05 . 2023

**சிவமலர் கந்தசாமி**

தபால்கந்தோர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் திருச்செல்வம் வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவமலர் கந்தசாமி அவர்கள் நேற்று (16.05.2023) செவ்வாய்க்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற Dr.சி. கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், ஆ.சிவயோகம், காலஞ்சென்றவர்களான நடராசா, நாகராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும், ந.தங்கரத்தினம், நா.செல்வம் மற்றும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், நவரத்தினம், மங்கையர்க்கரசி, விக்னேஸ்வராஜா, ஆறுமுகம்பிள்ளை, செல்லம்மா, சரஸ்வதி, தருமலிங்கம், கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், சத்தியதேவி - சிவானந்தராஜா, சத்தியசீலன் - மங்களேஸ்வரி, சத்தியமூர்த்தி, சத்தியநாராயணன், சத்தியகௌரி- தயாளன் ஆகியோரின் சித்தியும், ரவிசங்கர் - சாந்தி, சிவரூபி - சிவபாதம், சிவகலா, கஜன் - மதிவதனா, நிஷாந்த- நகுலா, கவிதா - சுரேஸ்குமார், அரவிந்தன் - பத்மப்பிரியா, தயாளினி - வடிவேற்கரசன், விஜயஸ்ரீ - பாலகிருஸ்ணன், சத்தியஸ்ரீ - முரளிதரன், ஜெயஸ்ரீ - கமலநாதன், சாந்தஸ்ரீ - தர்மஸ்ரீ, ரவீந்திரன் - இரட்ணசிங்கம், பத்மஸ்ரீ மோகனதாசன், ராஜஸ்ரீ - ஸ்ரீதரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி, கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராஜா பிளாஷா பின்புறம்,
74/1, திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்.

தகவல்: ஆ.சத்தியமூர்த்தி
(பேறாமகன்)
021 222 5836
077 1698 073

(CS 24884) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு.கந்தர் செல்லத்துரை



**மலர்வு 15.03.1938** **உதிர்வு 15.05.2023**

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் செல்லத்துரை கடந்த (15.05.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் கல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**கைதடி மேற்கு.**
**074 099 6662**

(CS 50450)A-1

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின்
மனிதவள முகாமைத்துவ துறையின்
**சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி
தேவரஞ்சனி சிவாஸ்கரன்** அவர்களின்
தாயார்

## திருமதி செல்வநாயகி கிருஸ்ணன்

கடந்த (15.05.2023) திங்கட்கிழமை
இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்து
துயருறுகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னையின்ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

**கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் ,
மனிதவள முகாமைத்துவதுறை, முகாமைத்துவக் கற்கைகள்
வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(CS/50443)AH-1

# மரண அறிவித்தல்



## திருமதி இராசமணி செல்லத்துரை

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி செல்லத்துரை கடந்த (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.45 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசபூமணி, சபாரத்தினம், நவரத்தினராசா, விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற அருந்தவநாயகி ஆகியோரின் சகோதரியும், பரமேஸ்வரி, தேவராசா, குணராசா, மகாராசா, அன்னம்மா, காலஞ்சென்ற செல்லையா மற்றும் புனிதவதி, தம்பிராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 854 9360**

(CS/50444)AH-1

# 30 ஆவது அகவையில் மீ(மூ)ண்டெழும் நினைவுகளே!

## அமரர் கோபாலகிருஸ்ணன் சாரங்கன்

**(யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும்,
சப்ரகமுவ பல்கலைக்கழக 3ஆம் வருட மாணவனும்)**



**மலர்வு 17.05.1993**

**உதிர்வு 10.11.2018**

தூளியிலே தூங்கையிலே உறவுகளோ வரிசையிலே
சிறு அசைவு கண்டதுமே ஓடோடித் தூக்கிடுவார்
தூக்கம் கலைத்திடுவார் தூங்க மறுத்திடுவாய்
அன்று தூங்காத் தூக்கமோ இன்று நீள் துயிலாச்சு
செல்லமாய் வளர்ந்தவனே சொல்லாமல் போனதெங்கே

சாலகத்தில் ஒருவட்டம் உனைத் தூக்க
வாலிபத்தில் ஒருவட்டம் உனைச் சேர - என்றும்
ஞாலகத்தில் ஒருவட்டம் உனை நினைக்க வைத்தாய்

உனக்கு ஐந்து வயதினிலே தம்பியவன் உதித்திடவே
தம்பிதான் வேண்டுமென்றாய் இன்று அவ்வுறவைத்
தவிக்கவிட்டு எங்கு சென்றாய்?

ஈராறு ஆண்டுகள் சஷ்டி நோன்பு நீ இருந்தாய்
நேர்த்தியுடன்
தேரோடும் வீதியிலே உன்தேகம் உருண்டதுவே
பக்தியுடன்
உன்தோள் தனில் அவர் திருமேனி சுமந்திருந்தாய்
சுத்தியுடன்
இத்தனையும் போதும் என்றோ இக்கதிக்குள்
ஆக்கினரே

வரன் பார்த்து வதுவை பூணும் நாளதிலே
திதி பார்த்து திவசம் செய்ய காலமிதோ
ஐயிரண்டு திங்கள் அன்னையவள்
கருவறையில்
முகமறியாப் பாலகனாய்

ஐயைந்து ஆண்டுகளே அவனியிலே
பவனி வந்தாய் ஒளி வீசும் ஆதவனாய்
ஆயுள் முழுவதுமே எம்மவரின்
நெஞ்சறையில்
நிலைத்திருப்பாய் சாரங்கனாய்

ஜாதகம் தனிலே உன் ஆயுளுக்கொரு
பாதகமன்றென ஜோதிடர் கூற்றாமே ஆதலின்
கஜவர் கவர்ந்திட இறைவர் உடந்தையென
நாஸ்திகம் நாம் கண்டோம்

உத்தமன் உன் வாழ்வில் இத்தரு
நிகழ்வொன்று ஏற்றிடல் முறையாமோ?
தர்மதேவதையே நீதி கேட்கின்றோம்
நடுநிலை நின்று பகர்வாய்

பற்தூரிகை முதலாய் பாதணி ஈறாக
நீ நுகர்ந்த
பொருட்கள் யாவும்
ஆவணப்படுத்தியுள்ளோம்
அரிய பொக்கிஷமாய்

இறுதி சில மணிநேரம் உயிர்ப்பிச்சை
வேண்டி நின்றாய் இறைவரிடம்
உதாசீனம் செய்தனரே துஞ்சியதே
உனது உடல் எஞ்சியதே எமது துயர்
வஞ்சகரே அவர் வேண்டித் துதிக்கவில்லை
உன் ஆன்ம சாந்திக்காய்
ஏங்கித் தவிக்கின்றோம்
உன் வரவை எண்ணி
கணமும் மறவாது தினமும்
நினைக்கின்றோம்
ஓடிவா செல்வனே!

**உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினரும்
உறவுகளும்.**

(CS/24875)AH-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 07 . 1955



இறப்பு 28 . 05 . 2022

## பாலசுப்பிரமணியம் ரஞ்சிற்

ஆண்டுகள் ஒன்று ஆயினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும்
உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**இல.77, நாயன்மார்வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**திருமதி ராதா ராமச்சந்திரன்
திரு: பா.ராஜேந்திரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி **கனகசுந்தரி சின்னத்தம்பி** (குஞ்சு)



ஈராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது
உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து
போகின்றோம் அம்மா
உங்களை நினைக்காத
நொடிகளில்லை

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை பூட்டப்பிள்ளைகள்**

தோற்றம் 14.11.1932 மறைவு 17.05.2021

(CS 24190) (3.6)



## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுப்பிரமணியம் **சின்னத்தம்பி**

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கு
இனியவனாய் வாழ்ந்து
எம்மைவிட்டுப் பிரிந்து
26 ஆண்டுகள்
மறைந்ததையா



என்றும் உங்கள் நினைவுகளுடன்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

தோற்றம் 12.03.1919 மறைவு 07.06.1997


## கணித பாடத்துக்கு இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 17

மறைந்த பிரபல பொருளியல் ஆசிரியர் அமரர் வேலாயுதம் கருணாகரன் ஞாபகார்த்தமாக இவ்வருடம் சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன் கருதி இலவச கணிதபாட கருத்தரங்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆ.ஆனந்தராஜா தலைமையில் வளவாளராக பிரபல கணித ஆசிரியர் எஸ். கே.தளையரட்ணத்தால் இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)


சிவமயம்



ஸ்தாபிதம் 1945.05.31 பதிவு இல. HA/S/JA/419

### அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்

### வருடாந்த வெளிமடை உற்சவம் - 2023

அம்பாள் அடியார்களே!

நிகழும் சோபகிருது வருடம் வைகாசித் திங்கள் 12ஆம் நாள் (26.05.2023) வெள்ளிக்கிழமை மேற்படி உற்சவம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| விளக்கு வைப்பு | : 19.05.2023 வெள்ளிக்கிழமை காலை பூசையுடன் நடைபெறும். |
| மடைப்பண்டம் எடுத்தல் | : 26.05.2023 வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணி பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும். |
| வெளிமடைப் பூசை | : 27.05.2023 சனிக்கிழமை காலைப் பூசையுடன் நடைபெறும். |
| 8ஆம் மடை | : 02.06.2023 வெள்ளிக்கிழமை மாலைப் பூசையுடன் நடைபெறும். |

காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 26.05.2023 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை மேற்கொள்ளலாம்.

மு.குறிப்பு : கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு இம்முறை அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலனசபை.**



### கடை வாடகைக்கு/ குத்தகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் இரண்டு கடைகளும், கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் ஒரு கடையும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கப்படும்.

**077 767 4119**



### பணிப்பெண் தேவை

வடமராட்சி பகுதியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**077 4080 766**



### மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் நடத்துதல் மற்றும் உணவு வழங்குதலுக்குமான பெறுகை - 2023/2024

மாவட்டச் செயலகத்துள் சிற்றுண்டிச்சாலையினை மேற்படி காலப் பகுதிக்கு நடத்துவதற்கு தகுதியான / தகைமை வாய்ந்த நடத்துனர்களிடமிருந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

விலைக் கேள்விதாரர்கள் மாவட்டச் செயலகத்தில் அலுவலகநாட்களில் 05.06.2023ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.30 மணியினுள் உரிய பெறுகை ஆவணங்களினை பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களினை மாவட்டச் செயலக தொலைபேசி இல-021 228 5352 லும் http://kilinochchi.dist.gov.lk எனும் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்

மாவட்டச் செயலாளர்
கிளிநொச்சி

(CR/8803)AH-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 14.06.1928 **குமாரசாமி கமலம்** மறைவு 16.05.2023

சுன்னாகம், புகையிரத நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கமலம் நேற்று (16.05.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகாத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், அருந்தவராணி, வரதராஜன், அருந்ததி, தனவதி, குணவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரிமளம், நவமணி மற்றும் கெங்காதேவி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, இரத்தினசிங்கம், திருநாவுக்கரசர், சின்னத்தம்பி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பேரின்பநாயகம், விமலாதேவி, அருணகிரிநாதன், ஜெகநாதன், காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்சனா, யானுகா, கயானி, பிரணவி, கார்த்திகன், மதுஷன், அனுஷன், அஜந்தன், கஜந்தி, கோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜவின், பிரவின், சர்வின், டக்ஷன், புர்மிதா, விகாஷ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2023) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுன்னாகம். 077 186 4887**

**தகவல்: குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டாய இடமாற்றத்துக்கு எதிராக

# தமிழ்ப்பெண் சிப்பாய்கள் முல்லைத்தீவில் கவனவீர்ப்பு!

கட்டாய இடமாற்றத்தைக் கண்டித்து, தமிழ்ப் பெண் சிப்பாய்கள் முல்லைத் தீவில் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

தமிழ்ப்பெண் சிப்பாய்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு முரணாக தற்போது கட்டாய இடமாற்றம் வழங்கப்படுகின்றது என்றும் தம்மால் அரசாங்கம் குறிப்பிடும் இடத்துக்குப்போகமுடியாதுஎன்றும்போராட்டத்தில் ஈடுபட்ட முல்லைத்தீவு கொக்காவில் முகாமைச் சேர்ந்த பெண் சிப்பாய்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் தமிழ்ப் பிள்ளைகள் மொத்தமாக 104 பேர் இருக்கின்றோம். 2012ஆம் ஆண்டிலிருந்து இந்த முகாமில் தான் நாங்கள் கடமை புரிகிறோம். எங்களை வேலைக்கு எடுக்கும்போது கிளிநொச்சியில்தான் வேலை என்று எடுத்தார்கள். ஆரம்பத்தில் எங்களை வேலைக்கு எடுக்கும்போது இராணுவத்தில்தான் வேலை என்று சொல்லவும் இல்லை. நாங்கள் வந்துவிட்டோம் என்பதற்காகவே இவ்வளவு காலமும் வேலைசெய்துகொண்டிருக்கின்றோம். ஆனால், இப்போது வவுனியா இராணுவ முகாமுக்குச் செல்லும்படி சொல்கின்றனர். வவுனியாவுக்குச் செல்வதற்கு குடும்ப சூழலும் பொருளாதார நிலைமையும் இடம்கொடுக்காது. இது தொடர்பில்பலமுறைபேசியும்எந்தவிதமான பதில்களும் கிடைக்கவில்லை. எங்களை ஆண்கள் தங்கும் இராணுவ முகாமுக்கே அனுப்புகிறார்கள். எனவே எமது அசௌகரியநிலைமையைக்கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் இது தொடர்பில்நல்லதொருமுடிவைப்பெற்றுத்தரவேண்டும்-என்றனர். (அ-ம-113)

## நாகபூஷணி...

இந்த அம்மன் சிலை இனத்தெரியாத நபர்களால், சட்ட அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இதை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உத்தரவிடக்கோரியும் யாழ்ப்பாணப் பொலிஸாரால் இந்த வழக்குத் தொடரப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, குறித்த சிலைக்கு உரிமை கோருபவர்கள் எவராயினும், நீதிமன்றில் சமுகம் அளித்து, உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்கலாம் என்று நீதிமன்றின் உத்தரவுக்கமைய நீதிமன்ற அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டது. இதையடுத்து ஏழு இந்து மத அமைப்புக்கள் வழக்கில் பிரசன்னமாகி விண்ணப்பங்கள் செய்தனர்.

சிலை அமைப்புடன் தாம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றாலும், மத நம்பிக்கையின் பேரில் அமைக்கப்பட்டுள்ள சிலையை அகற்றக்கூடாது என்று இந்த அமைப்புக்களின் சார்பில் விண்ணப்பங்கள் செய்யப்பட்டன. இந்து மத தொண்டர் சபை, சைவ குருமார் ஒன்றியம், சைவ மகாசபை, சிவசேனை, உருத்திரசேனை ஆகிய அமைப்புக்களும் மற்றும் இந்து மாமன்றமும், நல்லூர் ஆதீனமும் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் தமது கோரிக்கைகளை முன்வைத்தன.

குறித்த முதல் ஐந்து அமைப்புக்களின் சார்பில் மூத்த சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், தி.கணதீபன், பி.அபிதன், சிவஸ்கந்தசிறி, பானுப்பிரியன், ரிசிகேசன் ஆகியோரின் அனுசரணையுடன் முன்னிலையாகினர்.

நல்லூர் ஆதீனம் நீதிமன்றில் சமுகம் அளித்திருக்கவில்லை என்றாலும், ஆதீனம் மற்றும் இந்து மாமன்றத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் கே.சயந்தன், ஜொனி மதுரநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

சிலை அமைக்கப்பட்டிருப்பது தொடர்பில், எவரும் முறைப்பாடு செய்திருக்கவில்லை என்பதை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சார்பில் தோன்றிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், பொதுமக்களுக்கு தொல்லை ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கருத முடியாது என சட்டத்தரணிகளால் வாதிடப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையே சிலை விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும், பொலிஸார் நீதிமன்றத்தை நாடமுடியாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து, யாழ்ப்பாண நீதிவானால் உத்தரவிடப்பட்டதன் பேரில், பொலிஸாரும் சட்டத்தரணிகளும் தமது எழுத்து மூல சமர்ப்பணங்களை கடந்த 4ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். வழக்கின் தீர்ப்பு நேற்றையதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

தீர்ப்பை வழங்கிய யாழ்ப்பாண நீதிவான் ஏ.ஆனந்தராஜா, அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ள சிலையால் பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்பட்டிருப்பதாகக் குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தின் கீழ் அறிக்கையிட்டு, சிலையை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கட்டளை ஒன்றை வழங்குமாறு கோருவதற்கு, பொலிஸாருக்கு சட்ட அடிப்படை கிடையாது என்று சுட்டிக்காட்டினார். இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டியவர் இந்த அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் மாத்திரமே என்றும், நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு நீதிமன்று கட்டளையிடமுடியாது என்றும், பொறியியலாளர் விரும்பினால் நீதிமன்றை நாடமுடியும் என்றும் தெரிவித்த நீதிவான், வழக்குக்கு சட்ட ரீதியாக அடிப்படை இல்லை என்பதால் அதனை தள்ளுபடி செய்வதாகத் தீர்ப்பு வழங்கினார்.

குறித்த சிலையை பேணிப்பாதுகாக்க தம்மை அனுமதிக்குமாறு சில அமைப்புக்கள் விண்ணப்பித்துள்ளபோதிலும், வழக்குத்தள்ளுபடி செய்யப்படும் நிலையில் அந்தக் கோரிக்கைகளை பரிசீலிப்பதற்கு சட்டரீதியாக இடமில்லை என்பதால், அந்த கோரிக்கைகளை நிராகரிப்பதாக தனது தீர்ப்பில் நீதிவான் மேலும் தெரிவித்தார்.

இந்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு இந்து அமைப்புக்களும், இந்து மக்களும் நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26,66)

## எரிந்த...

கார்திகேசு திருப்பதி (வயது - 65) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வீட்டின் மலசல கூடத்தில் எரிவடைந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது கொலையா? அல்லது தற்கொலையா? என்று இன்னமும் உறுதிப்பட அறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இறப்புவிசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம,26,125)

## அரசியல்...

தொடர்பில் 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட அரசியல்கைதியான ஆரூரன் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்கவால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 'முதலாம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி பித்தளைச்சந்தியில் பாதுகாப்புச் செயலாளரான கோத்தாபய ராஜபக்சவைக் கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டி, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலை குண்டுதாரியால் நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று இராணுவப் பாதுகாப்பு அதிகாரிகள் உயிரிழந்ததுடன், பாதுகாப்புச் செயலாளரான கோத்தாபய ராஜபக்ச, இராணுவப் பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் காயமடைந்திருந்தனர். இந்தத் தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டியமை தொடர்பிலேயே 2008ஆம் ஆண்டு ஆரூரன் கைதுசெய்யப்பட்டார். 2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றப் பத்திரத்தில் கைதியான சிவலிங்கம் ஆரூரன், பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பத்தில் வழங்கியதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அரச தரப்பின் பிரதான சான்றாக முன்வைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது, அரச தரப்பின் பிரதான சான்றான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சந்தேகநபரால் சுயமாக வழங்கப்படவில்லை என்ற ஆட்சேபணை சந்தேகநபரின் சார்பில் முன்வைக்கப்பட்டதை அடுத்து உண்மை விளம்பல் விசாரணை நடைபெற்றது.

உண்மை விளம்பல் விசாரணையில் கைதியான சிவலிங்கம் ஆரூரனை பொலிஸார் சித்திரவதை செய்து கடும் காயங்களை ஏற்படுத்தி, குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினைப் பெற்றுக் கொண்டனர் என்பதை சாட்சியங்கள் மூலம் எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளமையை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தனது வாதத்தில் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இதையடுத்து, அரசதரப்பின் முக்கியமான சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நிராகரிப்பதாகக் கட்டளை வழங்கினார்.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரிப்பதாக நீதிமன்றம் கட்டளை வழங்கியதையடுத்து சந்தேகநபருக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, இந்த அரசியல் கைதி 15 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்து இந்தக் கைதிக்கு எதிராக வழக்கை மேலும் தொடர்ந்தும் நடத்தவேறு அரச சாட்சியங்கள் இல்லையாயின் கைதியை விடுதலை செய்யும்படி தனது சமர்ப்பணத்தில் வேண்டிக் கொண்டார்.

சட்டமாஅதிபர் சார்பில் முன்னிலையான பிரதிசொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி ரோகாந்த அபேசூரிய, வேறு சாட்சியங்கள் இல்லையென நீதிமன்றுக்கு அறிவித்ததையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க சிவலிங்கம் ஆரூரனை விடுதலை செய்தார். (அ-ம)

## ஆக்கிரமிப்பை...

மேற்கொள்ளப்படவுள்ள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக நாளையதினம் ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆலய அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் நாளை காலை இடம்பெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி, மத வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தைப் பலப்படுத்தவேண்டும் என்று ஆலய நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலய வளாகத்தினுள் தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாகவும், அவ்விடத்தை எல்லைப்படுத்தும் வேலைகளை எதிர்வரும் 18ஆம் திகதி மேற்கொள்ளப்போவதாகவும் கரைச்சிப் பிரதேசசெயலாளரால் ஆலய நிர்வாகத்தினருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதன் அடிப்படையிலேயே இந்த எதிர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள முனைந்தபோது, ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டதை அடுத்து அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## உளநலம்...

வரைக் கடத்த முயற்சித்தார் என்று தெரிவித்தே அந்தநபர்மீது முரட்டுத்தனமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலின் பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலேயே அந்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும், நீண்டகாலமாகச் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதும் தெரிய வந்துள்ளது.

வடக்கில் கடந்த சில தினங்களாக பாடசாலை மாணவர்கள் மர்ம நபர்களால் கடத்த முயற்சிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான கடத்தல் முயற்சிகள் பொதுமக்களால் முறியடிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பொதுமக்கள் மத்தியில் இருக்கும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை வரவேற்கப்படவேண்டியது. அதேநேரம் தேவையற்றவிதமாகத் தாக்குதல்களை நடத்துவதையும் பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். பொலிஸாரை உடனடியாக அணுகுவதன் மூலம் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கலாம் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம,9,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச கண்புரை அறுவைச்சிகிச்சை

யாழ். மாவட்டத்தில் கண்புரை அறுவைச் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கான அடுத்தகட்ட அறுவைச்சிகிச்சை முகாம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நாளையதினம் கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் மலரவனால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த அறுவைச் சிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று காலை 9 மணிக்கு தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகளுக்கு சமுகம் தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நெடுந்தீவு பிரதேசத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள் நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கும், நயினாதீவு பிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள் நயினாதீவு பிரதேச மருத்துவமனைக்கும், அனலைதீவு பிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள் அனலைதீவு பிரதேச மருத்துவமனைக்கும், எழுவைதீவு பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் எழுவைதீவு ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்துக்கும் சமுகம் தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அங்கிருந்து இவர்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கு சிறப்புப் போக்குவரத்து ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 18ஆம் திகதி அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் இவர்களை மீள அந்தந்த மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ-ம-26)

## வடக்கு விவசாய அமைச்சின் செயலர் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், மே 17

வடமாகாண விவசாய அமைச்சின் செயலர், முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடமாகாண பிரதம செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டதன் அடிப்படையிலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராகச் செயற்பட்ட ஆர்.வரதீஸ்வரன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். காரைநகர் பிரதேச செயலராகச் செயற்பட்ட ஜெகூ விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண ஆளுநராகச் செயற்பட்ட ஜீவன் தியாகராஜாவின் பதவி நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதி மாலையுடன் பறிக்கப்பட்ட நிலையில், அவர் பதவி இழப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னரே இந்த இடமாற்றக் கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளார். அந்தக் கடிதம் 10ஆம் திகதியில் அனுப்பப்பட்டது என்றவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் நேற்றையதினமே உரிய தரப்பினருக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-125)


## தேவை

புங்குடுதீவு பிரதான வீதியில் காணி தேவை.

**0777 29 54 28**

(CS 24883)A-1

## வேலைக்கு ஆள் தேவை (ஆண்)

**தனியார் நிறுவனம் ஒன்றின் சுன்னாகக் கிளைக்கு கிளைப் பொறுப்பாளர் (ஆண்) தேவை.**

- வயதெல்லை - 30 வயதுக்கு மேல்
- மாதச்சம்பளம் - 45,000/= இல் இருந்து

முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**074 191 7461**

(CS 50445)AH-1

## கட்டடம் வாடகைக்கு உண்டு

பலாலி வீதி, ஊரெழு மேற்கில் 80 சதுர அடி நீள அகலம் கொண்ட அனைத்து வசதிகளும் கொண்ட 15 அறைகளுடன் தனித்தனி இணைந்த நவீன குளியல் அறைகளுடன் கூடிய கடைத்தொகுதிக்கு மேல் அமைந்துள்ள மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையங்கள், விடுதிகள் என்பவற்றுக்கு பொருத்த மானதாகும். அத்துடன் நீண்டகாலத்துக்கு நிலைத்து செயற்படக் கூடிய வகையில் அனுமதி பெறவும் முடியும்.

தொடர்புகளுக்கு : ரவீந்திரன், தனுசியன்

**077 5284 180**

(CS 24880)A-1

## காணி விற்பனைக்கு

- ✻ யாழ்ப்பாணம் கீரிமலையில் 78 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
- ✻ கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- ✻ 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✻ நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- ✻ கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
- ✻ திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- ✻ காணியின் வடக்கு எல்லை கடல், தெற்கு எல்லை பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ✻ ஒரு பரப்பின் விலை - பத்து இலட்சம் ரூபாய். (1000000/=)



**தொடர்பு: 076 911 9371**
**076 7390 413**
**077 8748 135**

(CS 24885) A-1

## பணியாளர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை**

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): O/L, ICT, A/L,Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்:** (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர் :** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜீவல்லறி**

இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cs 39799) (N-1)

## மணப்பெண் தேவை

01. உடுப்பிட்டி. இந்து கௌரவகுலம் (V). 1990. உத்திரட்டாதி. BSc, Civil Engnineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33731
02. நல்லூர் - மூளாய். இந்து கௌரவகுலம் (V). 1987. ஆயிலியம். BSc (Hons) Software Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32328
03. நல்லூர் - அளவெட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1984. மகம். Business Administration, Canada Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29993
04. கந்தர்மடம் . இந்து. கௌரவகுலம் (V). 1977. உத்திரட்டாதி. MSc. IT (in UK), Canada Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29640
05. இணுவில் - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1986. ரோகிணி. Accountant, Norway Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31506
06. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. விசாகம். Bio Engineering. Engineer, Norway Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30569
07. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1989. மூலம். Graduate, Accountant. Denmark Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28622
08. வேலணை. இந்து. கௌரவகுலம் (V). 1987. ஆயிலியம். BSc, Engineering. Newzealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27086
09. பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1986. மகம். BSc, Swiss Citizen. Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28387
10. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V). 1985. ரேவதி. Graduate. Network Administration. USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507

(CS/50311)AH-1

தொடர்புகளுக்கு - S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 . 08 . 1990

இறைவன் அடியில் 28 . 05 . 2022



### நவரட்ணராஜா சங்கீத்காந் (சங்கி)

**கள்ளமில்லா உள்ளமொன்று**
**- எம்மை எல்லாம் தவிக்க விட்டு சென்ற நாள்**

நாட்கள் நீள நீள எங்கள் நெஞ்சில்
நிறைந்த கடல் போன்ற அளவில்லாத
உன் நினைவுகளும் எங்களை விட்டு
நீங்காது எம் மனதில் நீந்தி தத்தளிக்குதடா -சங்கி

நிலவு கூட இந்த உலகத்தை
ஒருநாள் மறந்து விடுகின்றது ஆனால்
ஒரு நிமிடம் கூட எங்கள் இறைவா - சங்கி
உன்னை நினைக்காத நேரமில்லையடா

கனவுகள் இல்லாத இரவுகள் கூட
இருக்கலாம் உன் நினைவுகள் இல்லாத
இரவுகளுக்கு வாய்ப்பே இல்லையடா சங்கி!

கண்முன்னே நீ வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும் - எங்கள்
கண்முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர் வாழும்டா சங்கி!

இத்தனை அவசரமாய் எங்கு
- தான் சென்றாயோ
இன்று வரை எங்களுக்கு சத்தியமாய்
- விளங்கவில்லை
வந்து விடு சங்கி உன்
- முகம் காண துடிக்கின்றோம்

31, கற்குளலேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
077 529 3900

**என்றும் உன் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.